# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU

| | | | | |
|---|---|---|---|---|
| மலர்–16, இதழ் – 7<br>Volume - 16, Issue - 7 | ஆனி திங்கள்<br>June 2025 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |




"Delivered by India Post"

www.indiapost.gov.in



பார்வதி
மருத்துவமனை
நீங்கள் எவ்வளவு காலம்
அதை மறைப்பீர்கள்?
லேசர் மற்றும் வீனாசீல் மூலம்
வெரிகோஸ்
இரத்த சுருள்களுக்கு
சிகிச்சை அளிக்கும்
பிரத்யேக வாஸ்குலர் துறை •
வடு இல்லாத, வலியற்ற மற்றும் •
தையல் இல்லாத சிகிச்சை
ஒரு நாள் சிகிச்சை மட்டுமே •
மேலும் விபரங்களுக்கு,
அழைக்கவும்
044 2238 2248
டாக்டர் S. பிரதாப் குமார்
எம்.எஸ்., எம்.சி.எச் (வாஸ்குலர் சர்ஜரி)
எஃப்.வி.இ.எஸ் (ஆஸ்திரியா)
மூத்த மருத்துவ ஆலோசகர்,
வாஸ்குலர் & எண்டோவாஸ்குலர் சர்ஜன்

# வாழ்த்துகிறோம்



அகவை 80 காணும் கார்குல வள்ளல்



## திரு. ச. வெங்கடேசன் பிள்ளை

## திருமதி ஞானாம்பிகை



தம்பதியினரை வணங்கி வாழ்த்துகிறோம்.

கார்காத்தார் ஒப்புரவு
சென்னை கார்காத்தார் சங்கம்



# ADYAR

## PADMANABHA NAGAR

**2 BHK - 960 sqft**
**3 BHK-1920 sqft**

- Prime Location
- Stilt + 3 Floors
- Premium Finish with Interior
- Solar Panel with Net Metering

***Other on Going Project***

**RAM NAGAR**
**Madipakkam**
**(Near Ramar Temple)**

**2BHK-86 L**

- Calm Residential Area
- Close to MRTS Station & Velachery
- Stilt + 3 Floors
- Total 6 Flats - All 2 BHK

- *We undertake* **CONSTRUCTION CONTRACT ON TURN-KEY BASIS** *right from Design & Approval.*
- *For profitable* **JOINT VENTURE** *Land owners are invited.*

## MALAR FOUNDATIONS

**94440 70108 / 70109 41135 / 97870 61547**



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com




**Thiruvasantham**
**PURE VEG**

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)


CELEBRATE LIKE A LANDLORD
DESTINATION
WEDDING
@
Saradharam's
LAKSHMI VILAS
HERITAGE HOTEL
NEAR VEERANAM LAKE
+91 9442591456 / 94425 91466
lakshmivilasheritage@gmail.com
http://www.lakshmivilasresort.com/
71/2, SIVANKOIL STREET, NEDUNCHERRY T. PUTHUR TAMIL NADU


PROSPERA
BY DAC
Introducing
India's First-Ever
Women-Centric Residences
LUXURY 2&3 BHK APARTMENTS @ ₹79* LAKHS ONWARDS
women friendly homes
Member CREDAI
NEXT TO PORUR RAMACHANDRA
AERIAL VIEW
50+ AMENITIES
1ST TIME IN INDIA
SHE CORNER
WOMEN GYM & YOGA
WORK STATION
CONTEMPORARY ELEGANT FACADE
CRECHE
AIR CONDITIONED GYM
INDOOR GAMES
MINI THEATRE
TN/1/Building/0125/2025 dated 09.04.2025 | www.rera.tn.gov.in | *T&C Apply
DAC™
DREAM ASCEND CONQUER
93003 93003
www.dacdevelopers.com
100+ PROJECTS
3M+ SQFT CONSTRUCTION
2800+ HAPPY FAMILIES

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

**குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/- மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

**இதழின் உள்ளே....**




சங்க நிகழ்வுகள் .......................................... 11–19

ஜன நாயகத்தின் தூண்கள்.......................................... 41

சிறுவர் பகுதி.......................................... 44–47

சங்கப் பலகை .......................................... 48

மணமகன் / மணமகள் தேவை .......................... 50–54



**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.


## ஏடு இட்டோர் இயல்



எம் குலச் சொந்தங்களுக்கு கார்காத்தார் ஒப்புரவின் வணக்கங்களும்! வாழ்த்துக்களும்!

இவ்வாண்டு தென்மேற்கு பருவ மழை ஒரு வாரம் முன்பாகவே, மே 24–ஆம் தேதி அன்று துவங்கிவிட்டதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. 16 ஆண்டுகளுக்குப் பின் பருவமழை முன்கூட்டியே துவங்கியுள்ள நிலையில், கேரளாவில் பலத்த மழை தொடங்கிவிட்டது. டெல்லியிலோ சில தினங்களுக்கு முன் துறைக்காற்றுடன், ஆலங்கட்டி மழைபெய்ததுடன், ஸ்ரீ நகர் சென்ற விமானத்தின் மூக்குப் பகுதி பழுதாகியும், விமானம் பத்திரமாக தரை இறங்கியது விமானியின் மதி நுட்பமும், இறையருளுமே ஆகும். 107 வருடங்களுக்குப் பின் மும்பையில் மே மாதத்தில் கன மழை பெய்து உள்ளது.

மே 10–ஆம் தேதி வாட்டிகனில் பல நாடுகளிலிருந்து கூடிய கார்டினல்ஸ், புது போப்பாண்டவராக Cardinal Robert Prevost' அவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர். முதல் முறையாக அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் இனி போப் லியோ XIV என அறியப்படுவார்.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் பகல்காமில் நடந்த தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பதிலடியாக, இந்திய ராணுவம் மே 7–ஆம் தேதி புதன்கிழமை இரவு, 'ஆபரேஷன் சிந்தூர்' எனும் தாக்குதலை நடத்தியது. நள்ளிரவில் 23 நிமிடங்களில் இலக்குகளைத் தாக்கி அழித்தது. பொறுமையாக, துல்லியமாக திட்டமிட்டு பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள ஒன்பது பயங்கரவாத தளங்களை 24 ஏவுகணைகள் செலுத்தி, இந்திய ராணுவம் அழித்துள்ளது. ஏவுகணை, ட்ரோன் தாக்குதலில் முன்னோடிகளான இஸ்ரேல், அமெரிக்கா கூட இவ்வளவு குறைந்த சிவிலியன் இழப்புகளுடன் தாக்குதல் நடத்தியதில்லை என்பதால் இந்தியாவின் இந்த நடவடிக்கை உலக நாடுகளுக்கு வியப்பையும், பிரமிப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

ட்ரோன் படையை அழிக்கும் இந்தியாவின் புதிய ஆயுதத்திற்கு 'பார்கவ அஸ்திரம்' என ராணுவம் பெயர் சூட்டியுள்ளது. பூமியிலிருந்து 2½ கி.மீ உயரம் வரை பறந்து வரும் ட்ரோன்களை இந்த அஸ்திரத்தால் தாக்கி அழிக்க முடியும். இதில் உள்ள மென்பொருள்

எதிரியின் ட்ரோன்களை குழப்பவும், ஏமாற்றவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுப்பரவல் அதிகரித்துள்ளது. ஹாங்காங், சிங்கப்பூரில் அதிக அளவில் காணப்படுகிறது. புதிய உருமாறிய கொரோனாவும் நம் நாட்டில் தென்பட்டுள்ளதாக தெரிகிறது. கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா, டில்லி, கேரளாவில் பாதிப்பு சற்று அதிகமாக உள்ளது. தமிழகத்தில் 66 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த புதிய வகைத் தொற்றால் பெரிய அளவு பாதிப்பு எதுவும் ஏற்படாதென்றும், உயிருக்கு ஆபத்து இல்லை எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் பாதுகாப்பு கருதி முகக்கவசம், கரங்களைச் சுத்தப்படுத்துதல், சமூக இடைவெளி கடைப்பிடிப்பது நல்லது.

மே மாதத்தில் நம் தேசத்தின் மூத்த விஞ்ஞானிகள் இருவர் வயது மூப்பு காரணமாக இறைவனடி சேர்ந்துள்ளனர். ஒருவர் 87 வயதான வான் இயற்பியல் விஞ்ஞானி ஜெயந்த் நார்லிகர், இந்திய வான் அறிவியல் துறையில் முக்கிய பங்காற்றியவர். மற்றொருவர் நாட்டின் மூத்த அணு விஞ்ஞானி எம். ஆர். சீனிவாசன் அவருக்கு வயது 95. அவர் ஊட்டியில் காலமானார். இரு மாபெரும் விஞ்ஞானிகளின் ஆத்மாக்கள் சாந்தியடைய ஈசனைப் பிரார்த்திப்போம்.

12–ஆம் வகுப்பு மதிப்பெண்கள் வந்து, நமது மாணவச் செல்வங்கள் அவர்கள் விரும்பும் கல்லூரியில் சேரும் கனவு நனவாக வாழ்த்துகிறோம் !

வாழ்க வளமுடன் !!

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.

❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

***அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,***
***எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.***
***என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.***

*- கார்காத்தார் ஒப்புரவு*

# சங்க நிகழ்வுகள்

### சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## நங்கநல்லூர்

25–5–2025 அன்று சங்கத்தின் மாதாந்திர செயற்குழு கூட்டம் தலைவர் தலைமையில் அவரது வரவேற்பு மற்றும் ஓவியா – விஜயாள் இணைந்து பாடிய இறைவணக்கம் பாடலுடன் துவங்கியது.

சங்க உறுப்பினர் திரு. K. வீரமுத்து மற்றும் திரு. S. கண்ணன் இவர்களது மாமனார் திரு. சொக்கலிங்கம், பெருங்களத்தூர் அவர்களது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சென்ற மாதத்தில் கூட்ட அறிக்கையும் தொடர்ந்து சங்கத்தின் பிற நிகழ்வுகளும் விவரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து பொருளாளர் சங்கத்தின் வரவு செலவு கணக்கினை சமர்ப்பித்தார்.

நீர் மோர் வழங்குவதற்கு சிறப்பாக தயாரித்தளித்த திருமதி. சிவகலை அசோக்குமார், ஆதம்பாக்கம் அவர்களுக்கு பாராட்டுகளும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

சங்க உறுப்பினர்களது அன்பு குழந்தைகள் பத்து மற்றும் 12–ம் வகுப்பு தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்வானதற்கு வாழ்த்துக்களும் பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டது.

விவரம் வருமாறு :

B. யோகேஸ்வரன் S/o S. பாலமுருகன் 10–ம் வகுப்பு – 487

E. ரேணுதர்ஷினி D/o D. இளையராஜா 10–ம் வகுப்பு – 484

S. ஹாசினி D/o சதீஷ்குமார் 10–ம் வகுப்பு – 490

G. காமேஷ் S/o A. கணேஷ் 12–ம் வகுப்பு – 557

S.P. ஆதித்யா D/o M. ஸ்ரீதர் 12–ம் வகுப்பு – 516

S. திவ்யஸ்ரீ D/o சரவணன் 12–ம் வகுப்பு – 419

G. சௌமியா D/o K. கோவிந்தராசு 12–ம் வகுப்பு – 471

ஆகஸ்ட் மாதம் சுற்றுலா செல்ல திட்டமிடப்பட்டது. இறுதியாக இணைச்செயலாளர் திரு. V. கண்ணன் அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட நபர்களுக்கு திரு. K.R. கார்த்திகேயன் மற்றும் திரு. S. சரவணக்குமார் அவர்களால் இரவு உணவு வழங்கப்பட்டது.

– க. சரவணன்,

தலைவர்.

## அண்ணாநகர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 18.5.2025 அன்று "நான் ஒரு ஐஏஎஸ் அகாடமியில்" தலைவர் ஜெ. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் திரு. R. பிரபாகரன் அவர்களின் தந்தை இரா. இராமதாஸ் பிள்ளை கொடுங்கையூரில் 25–4–25 அன்று இயற்கை எய்தினார்கள். அவருடைய மறைவுக்கு இரண்டு நிமிடம் "மௌன அஞ்சலி" செலுத்தப்பட்டது.

நமது கார்குலத்தை சேர்ந்த மூத்த இருதய மருத்துவர் / ஷண்முகசுந்தரம் அவர்களுக்கு "வாழ்நாள் சாதனையாளர் விருது" தமிழக அரசு வழங்கியது. அவருக்கு இக்கூட்டத்தில் பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

திரு. பாலபிரகாஷ் அவர்கள் நன்றி சொல்ல கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

– ஜெ. கோபாலகிருஷ்ணன்,

தலைவர்.

செல் : 9444044169

## போரூர் :

25.05.2025 ஞாயிறு அன்று சங்க செயற்குழு கூட்டம் கௌரவ ஆலோசகர் திரு. இளங்கோ அவர்களின் அலுவலகத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. திரு. ஐ. கைலாசம் அவர்களின் சகோதரர் ரெத்தின சபாபதி, திரு. A. ராமலிங்கம் அவர்களின்

சகோதரி கணவர் ரெங்கநாதன், சங்க உறுப்பினர் வாகீசன், சந்திரமோகன் அவர்களின் தாயார், சங்க உறுப்பினர் சுபாஷ் சந்திரன் ஆகியோரின் மறைவிற்கு சங்கத்தின் சார்பில் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. சங்கத்தின் 10ம் ஆண்டு விழா செப்டம்பர் மாதத்தில் நடத்த ஆலோசிக்கப்பட்டது. எனவே விடுப்பட்ட உறுப்பினர்கள் உடன் சங்கத்தில் இணையுமாறு கேட்டுக் கொள்கிறோம். துணைத் தலைவர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது. நிகழ்ச்சிக்கு இடம் அளித்துவிருந்து அளித்தஇளங்கோகுடும்பத்தாருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

A. ராமலிங்கம்,

தலைவர்

## பெருங்களத்தூர்

சங்க செயற்குழு கூட்டம் 18–05–2025 அன்று சிவாலி ஹாலில் தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆறாவது ஆண்டு விழாவிற்கு பிறகு 10 கார்குல சொந்தங்கள் புதிய உறுப்பினராக நமது சங்கத்தில் இணைந்து உள்ளார்கள். 06–01–2025 முதல் 07–05–2025 வரையிலான வரவு செலவு மற்றும் ரொக்க இருப்புகள் படிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

நமது சங்க உறுப்பினர்கள் திரு. A. சந்தோஷ்குமார் – திருமதி. S. சுமதி ஆகியோரின் செல்வ மகன் S. Tharunprasanth 12–ம் வகுப்பு நடேசன் வித்யாலயா, Mannivakkam 575/600

திரு. V. செந்தில்குமார் – திருமதி. G. அமுதா ஆகியோரின் செல்வ மகன். ஸ்ரீபிரசன்னா 10–ம் வகுப்பு St. John's School, Perungalathur 473/500

திரு. M. சிவபாலன் திருமதி. சுனிதா அவர்களின் செல்வ மகன் S. Tharun, 10–ம் வகுப்பு (CBSE) 485/500 மூன்று மாணாக்கர்களுக்கும் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டது.

திரு. G. முத்துகுமாரசாமி அவர்கள் நமது பகுதியில் 2026–ல் பொது தேர்வு எழுத உள்ள மாணாக்கர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தலாம் என்ற கருத்தினை ஏற்று 2025 டிசம்பர் மாத கடைசி 2026 ஜனவரி மாத முதல் வாரத்தில் Orientation Course நடத்த முடிவு செய்யப்பட்டது.

நமது சங்க உறுப்பினர் C. வெற்றிவேந்தன் அவர்களின் தாயார் திருமதி. சீதாலட்சுமி அம்மையார் அவர்களின் மறைவிற்கு மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பாராட்டு பெற்ற மாணாக்கர்களின் பெற்றோர்கள் சங்கத்திற்கு நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

நிறைவாக திரு. A. பட்டாபிராமன் அவர்கள் நன்றி நவில அனைவரும் இணைந்து தேசிய கீதம் பாட கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கோ. இராஜகோபால்

செயலாளர்.

## காட்டுமன்னார் கோயில்:

ஒன்றிய கார்காத்தார் சங்க செயற்குழுக்கூட்டம் 20–04–2025 அன்று பொருளாளர் திரு. V. ராமகிருஷ்ணன் இல்லத்தில் நடைபெற்றது.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

2024 – 2025–ம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையினை பொருளாளர் சமர்ப்பிக்க அனைவரும் ஒருமனதாக ஏற்றனர்.

தற்போதைய பொறுப்பாளர்களில் தலைவர், செயலாளர், பொருளாளர், பதவிகாலம் முடிவடைய உள்ளதால் ஆகஸ்ட் 2025–ல் நடைபெறவுள்ள பொதுக் குழுக்கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதென முடிவெடுக்கப்பட்டது.

2024 – 2025 கல்வியாண்டில் இப்பகுதி மாணவர்களுக்கு மேற்படிப்பு பயில CREW TRUST மூலம் கல்வி உதவித்தொகை வழங்கிய சென்னை ராதா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் (பி) லிட் நிறுவனர் கார்குல வள்ளல் திரு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- V.R. ஞானம்,

Cell No : 9444876164

செயலர்.

## சீர்காழி :

சங்க 22–ம் ஆண்டு விழா ஏப்ரல் 28–ம் தேதி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

காலை 8.00 மணிக்கு திரு. M.S. திருநாவுக்கரசு பிள்ளை ஓய்வு பெற்ற ஆசிரியர், சங்க கொடியினை ஏற்றினார்கள். காலை 8.30 மணிக்கு மகளிர் அணியினர் குத்துவிளக்கேற்ற ஆண்டு விழா இனிதே தொடங்கியது.

மகளிர் கோலப்போட்டியில் கலந்து கொண்டனர். உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு விளையாட்டு போட்டி நடத்தப்பட்டது. LKG to +2 வரை பயிலும் மாணவ, மாணவிகள்)

மதிய உணவு இடைவேளைக்கு பிறகு LKG & UKG குழந்தைகளுக்கு மாறுவேட போட்டியும், 10th to XII மாணவ, மாணவிகளுக்கு AI செயற்கை நுண்ணறிவு பற்றிய பேச்சு போட்டியும் நடத்தப்பட்டது.

மாலை **4.00** மணிக்கு மாநில பொறுப்பாளர்கள் தலைவர் திரு. KKR சுரேஷ் செயலாளர் திரு. பாலசுப்ரமணியன், பொருளாளர் திரு. G. ராமநாதன் மற்றும் அமைப்பு செயலாளர் திரு. கயிலை சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

செயலாளர் திரு. C. அகோரம் ஆண்டு அறிக்கை வாசித்தார். அதில் சென்ற ஆண்டு நடந்த சிறப்பு மங்கல சந்திப்பு பற்றி கூறப்பட்டது.

விவாகரத்து பெற்றவர்கள், கணவன் அல்லது மனைவியை இழந்தவர்களுக்கான மறுமணம் என்பது நல்ல வரவேற்பை பெற்றது. கல்வி உதவிதொகையாக சங்கத்தின் சார்பில் Rs. 69,000 வழங்கப்பட்டது.

பொருளாளர் திரு. S. ரவிச்சந்திரன் நிதி நிலை அறிக்கையைவாசித்தார். சிறப்பு விருந்தினராக டாக்டர் திரு. C. சிற்சபேசன் MBBS,D.ortho,MRCS,FRCS Spine Follo Ship (UK) இவர்கள் எலும்பு மற்றும் மூட்டு சம்பந்தமாக நல்லதொரு விளக்கம் அளித்தார்கள். ஈசி சேர்களில் அமர்வதால் ஏற்படும் அசௌகரியம், மற்றும் ஆரோ வாட்டரை விட போர் வாட்டர் சிறந்தது என்று கூறியது ஏற்புடையதாக இருந்தது உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு நல்லதொரு விளக்கம் அளித்தார்கள்.

சிறப்பு பேச்சாளர் முனைவர். சா. நீலகண்டன் கலந்து கொண்டு உறவுகளும், உணர்வுகளும் என்ற தலைப்பில் உறுப்பினர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினர். போட்டியில் கலந்து கொண்ட மாணவ, மாணவியர்களில் ஒருவரை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து, திரு. கி. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் ½ கிராம் தங்க நாணயத்தை வழங்கினார்கள். போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு பொன்னாடை போற்றியும் கௌரவிக்கப்பட்டார்கள்.

மாநில சங்கத்தின் செயற்குழு கூட்டம் சீர்காழியில் நடந்தது. செயற்குழு உறுப்பினர்கள், சீர்காழி சங்கத்தின் அழைப்பை ஏற்று ஆண்டு விழாவில் கலந்து கொண்டார்கள். மேலும் எங்கள் அழைப்பை ஏற்று கலந்து கொண்ட கும்பகோணம் சங்க நிர்வாகிகள், மற்றும் இணைப்பு சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் பொன்னாடை போற்றி கௌரவிக்கபட்டார்கள்.

சீர்காழி சங்க தலைவர் பேசுகையில், சங்கத்தில் கல்வி உதவி தொகை வாங்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் சங்கத்தின் செயல்பாடுகளில் பங்கேற்க வேண்டுமாறு கேட்டு கொண்டார்கள் மேலும் நம் இனத்தில் திருமண வயதைக் கடந்தும் குறிப்பாக ஆண்களும், சில பெண்களும் திருமணம் ஆகாமல் இருப்பது மிகவும் வருத்தமாக உள்ளது. எனவே பெற்றோர்கள் காலம் கடந்தாமல் திருமண பந்தத்தை ஏற்படுத்தி தருமாறு கேட்டுகொண்டார்கள்.

.இறுதியில் திரு. கல். சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் நன்றி கூற இரவு விருந்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- C. அகோரம்,
செயலாளர்.

## மயிலாடுதுறை :

செயற்குழு கூட்டம் **04–05–2025** அன்று திருமதி. அகிலா இரத்தினகுமார் செயலர் மகளிரணி அவர்களின் இறைவணக்கத்துடன் திரு. T. ரவிக்குமார் துணை தலைவர் அவர்களின் வரவேற்புரைக்கு பின் செயலர் அறிக்கையினை வாசித்திடவும் பொருளர் சங்கத்தில் பராமரிக்கப்படும் மூன்று இனங்களின் வரவு செலவினைப் பதிவு செய்தார் வரவு செலவினங்கள் செயற்குழுவில் ஏற்கப்பட்டது. தலைவர் B. ராமச்சந்திரன் தனது கருத்துக்களைப் பதிவுச் செய்தார் பின்னர் முன்னாள் மாநில துணை தலைவர் திரு. S. சண்முகம் பிள்ளை, முன்னாள் இணைச்செயலர் திரு. B. சுவாமிநாதன், முன்னாள் பொருளாளர் சு. ஆனந்தன், முன்னால் செயலர் திரு. P. சுவாமிநாதன் அனைவரும் சங்க வளர்ச்சியினை பற்றி சில கருத்துக்களை பதிவு செய்தார்கள். துணை தலைவர் திரு. T. ரவிக்குமார் வரும் ஆகஸ்ட் மாதம் மங்கலசந்திப்பு நடத்த ஒரு குழு அமைக்க வேண்டும் என்றும் மேலும் நமது கார்குல மாணவ மாணவிகள் 10th மற்றும் 12th நடப்பு கல்வியாண்டில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள், பணி நிறைவு பெற்றவர்கள், பதவி உயர்வு பெற்றவர்கள், பணியில் சிறப்பு விருது பெற்றவர்களுக்கு பாராட்டு செய்ய செயற்குழுவில் பதிவு செய்தார். இந்த பதிவினை, செயற்குழு உறுப்பினர்கள் ஏற்று கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் மகளிர் அணி வரவு செலவுகள் தாக்கல் செய்யப்பட்டு இரங்கல் தீர்மானத்துடன் செயற்குழு கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

- S. தில்லைநாயகம், செயலர்

## மயிலாடுதுறை மகளிரணி

மயிலாடுதுறை மகளிரணி சார்பில் நகரச் சங்கக் கட்டிடத்தில் 27–4–25 முதல் 29–4–25 வரை 3 நாட்கள், 5 வயது முதல் 15 வயது வரை உள்ள மாணவ, மாணவியருக்கான கோடை சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது.

27–4–25 அன்று வந்திருந்த மாணவர்களில் ஒருவரான செல்வி. ஷிவானி இறைவணக்கம் பாட, இணைச்செயலர் திருமதி. சுந்தரி வரவேற்புரையும், இப்பயிற்சி வகுப்பின் முக்கிய நோக்கத்தைப் பற்றியும் கூற, நிகழ்ச்சி இனிதே தொடங்கியது.

இணைச்செயலர் திருமதி. கார்குழலி, தேவாரப்பாடல்கள் மாணவச் செல்வங்களுக்கு தன் கணீரென்ற குரலில் பயிற்றுவித்தார்கள். நம் மழலைச் செல்வங்கள் கோயிலுக்குச் சென்றால் ஒவ்வொரு சாமி சன்னதியிலும் ஒரு பாடலைப் பாட தெரிந்து இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, விநாயகர், முருகன், சிவன், அம்மன் பாடல்கள் சொல்லி கொடுக்கப்பட்டது.

தலைவி திருமதி. சுகுணாதேவி, Art & Craft பயிற்சியினை U.K.G. முதல் 4–ம் வகுப்பு வரையிலும், 5–ம் வகுப்பு முதல் 10–ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு என்று தனித்தனியாகப் பிரித்து மிகவும் நேர்த்தியாக நடத்தினார்கள். பொருளர், திருமதி. வசந்தி 5–ம் வகுப்பு முதல் 10–ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு yoga கலையின் ஒரு பகுதியான மூச்சுப் பயிற்சி (பிராணாயாமம்) யும் மற்றும் சில ஆசனங்களையும் மாணவர்களுக்குப் புரியும் வகையில் சொல்லி கொடுத்தார்கள்.

செயலர், திருமதி. அகிலாண்டேஸ்வரி மற்றும் இணைச்செயலர் திருமதி. சுந்தரி இருவரும் வேதாத்ரி மகரிஷியின் எளிய முறை உடற்பயிற்சிகளில் கை, கால், கண் பயிற்சிகளை குழந்தைகளோடு இணைந்தவாறு, சிறு குழந்தைகளும் புரிந்து கொண்டு செய்யும் வகையில் சொல்லி கொடுத்தனர். இந்த 3 நாட்களும், இந்த அனைத்துப் பயிற்சிகளும் மற்றும் Sudoku மற்றும் Puzzles-ம் சொல்லி கொடுக்கப்பட்டது. மாணவர்களிடம் துணைத்தலைவி திருமதி. விஜயா விடுகதைகள் கேட்டு அவர்களை உற்சாகப்படுத்தினர். இந்த நிகழ்வில் 40க்கும் மேற்பட்ட மாணவர்களும், பெற்றோர்களும், நகரச்சங்க பொறுப்பாளர்களும், மகளிரணி முன்னாள் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

– மகளிரணி செயலாளர்,
மயிலாடுதுறை.

## செம்பனார்கோவில் :

சங்க கூட்டம் 06–05–2025 அன்று திரு. கி. இராமநாதன் அவர்கள் தலைமையில் திரு. இரமேஷ் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. திரு. இரமேஷ் அவர்கள் வரவேற்பும், அவர்கள் புதல்விகள் செல்வி. R. கோபிகா, R. மித்ரா அவர்கள் இறைவணக்கம் பாடிட, குரு முத்துகுமார் சென்ற மாத கூட்டறிக்கை வாசித்திட பொருளாளர் சி. செல்வராஜ் அவர்கள் வரவு / செலவு அறிக்கை கூற கூட்டம் இனிதே தொடங்கியது.

சங்கத் தலைவர் அவர்கள் பேசுகையில் 27–04–2025 அன்று சீர்காழியில் நடைபெற்ற செயற்குழுக்கூட்ட செயல்பாடுகள் அதில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் பற்றியும் விரிவாக கூறினார்கள். நமது பகுதிக்கு சீர்காழி திரு. சிங்காரன் பிள்ளை அவர்கள் அறக்கட்டளை உறுப்பினராக தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார்கள் என்றும், 27–04–2025 என்ன "படிக்கலாம் எங்கு படிக்கலாம்" என்ற நிகழ்ச்சி மயிலாடுதுறை நகர கார்காத்த சங்க கட்டிடத்தில் நடைபெற்றது என்றும் கூறினார்கள்.

சென்னை காட்டாங்குளத்தூரில் SRM பல்கலை கழகத்தில் நடைபெற்ற "64 வது சைவசித்தாந்த மாநாட்டில் திருமதி. K. ரெத்தினவதி அவர்கள் கலந்து கொண்டு "இலக்கிய பூங்கா – திருமந்திரம்" என்ற ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்துள்ளார்கள் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

சங்க சிறப்பு தலைவர், திரு. நடனம் பிள்ளை அவர்கள் கூட்டம் நடத்திய இல்லத்தாரை பற்றியும் அவர்கள் குடும்ப சிறப்புகள் பற்றியும் கூறினார்கள். தலைவர் அவர்கள் செயற்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட அறக்கட்டளை பற்றி திரு. நடனம் பிள்ளை சங்கம் அறக்கட்டளை உருவான விதம் மெய்கண்டார் ITI ஆரம்ப காலத்தில் எவ்வாறு செயல்பட்டது என்றும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள்

கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு ஆண்களுக்கான பரிசு நமது சங்க தலைவர் திரு. M.C. இராமநாதன் அவர்களுக்கும் பெண்களுக்கான பரிசு திருமதி. காந்திமதி அவர்களுக்கும் இல்லத்தாரால் சிறப்பு செய்யப்பட்டது. இல்லத்தாரால் இரவு விருந்து அளிக்கப்பட்டது. சங்க செயலர் திரு. நெடுஞ்செழியன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

கி. இராமநாதன்.

## பரசலூர் :

04–05–2025 அன்று சங்க கூட்டம் நக்கீரர் தெரு தலைவர் க. கோவிந்தராஜன் இல்லத்தில் பானுமதி கோவிந்தராஜன் இறைவணக்கம் பாட கோவிந்தராஜன் வரவேற்புரை நிகழ்த்த கூட்டம் துவங்கியது.

செயலர் வீ. கண்ணன் பிள்ளை சென்ற மாத அறிக்கையையும், பொருளர் S.M. விஜய் பிள்ளை நிதிய அறிக்கையும், தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை மு.அ. நிதிய அறிக்கையையும் வாசிக்க நிதிய சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க வளர்ச்சிக்கு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள்.

மே மாதம் 3, 4, 5, தேதிகளில் தருமபுரம் ஆதீனம் சார்பாக சென்னையில் நடைபெற்ற அனைத்துலக சைவ சித்தாந்த மாநாட்டில் வீ. கண்ணன் பிள்ளை, க. கோவிந்தராஜன் பிள்ளை, S.M. விஜய் பிள்ளை கலந்து கொண்டனர்.

மே 19–ம் தேதி தருமபுரம் ஆதீனம் பட்டண பிரவேச நிகழ்வில் பரசலூர் சங்கத்தின் சார்பில் கலந்து கொண்டனர்.

பஹல்ஹாம் தாக்குதலில் தீவிரவாதிகளால் உயிரிழந்த 26 பேர்கள் ஆத்மா சாந்தி அடைய மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பாகிஸ்தான் இராணுவ தாக்குதலை முறியடித்த இந்திய இராணுவத்திற்கும் இந்திய அரசுக்கும் பாராட்டுதல் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது.

சிறப்பு குலுக்கலுக்கான ஆண்களுக்கான பரிசு G. சேகர் பிள்ளை, பெண்களுக்கான பரிசு R. ஈஸ்வரிக்கும் முறையே விஜய், விஜி வழங்கினார்கள்.

இயற்கை எய்திய S. பாலசுப்பிரமணியன் பிள்ளைக்கும், K.S. சீனுவாசன் பிள்ளையின் சம்மந்தி மன்னம்பந்தல் வைரக்கண்ணு பிள்ளைக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன்,
செயலர்.
9894960438

## மணிக்கிராமம் :

சங்க கூட்டம் 10–5–25 அன்று சிவன்கோவிலில் பிரதோஷ வழிப்பாட்டுக்குப் பிறகு தலைவர் திரு. G. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. சங்க முன்னாள் தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்க, செயலர் திரு. T. கபிலன் அறிக்கை வாசிக்கவும் பொருளாளர் திரு. S. பரமநாதன் வரவு – செலவு கணக்குகளைப் படிக்கவும் சங்கம் அதை ஏற்றுக்கொண்டது. இந்த ஆண்டு சந்தா செலுத்தாதவர்கள் விரைவில் செலுத்த கேட்டுக் கொள்ளப்பட்டது. சங்கத்தின் நிதியைப் பெருக்க ஆலோசிக்கப்பட்டது. கோடை சுற்றுலா செல்ல உறுப்பினர்கள் கேட்டு கொண்டதற்கிணங்க விரைவில் செல்ல தீர்மானிக்கப்பட்டது.

– கோ. அன்பழகன்,
தலைவர்.

## மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு : சங்க கூட்டம் 14–5–2025 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது.

சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் வரவேற்றுப் பேசினார். 12–05–25 சித்திரை நிறைமதி நன்னாளில் நெடுங்காடு கார்காத்தார் சங்க கூட்டத்தில் செம்பை ஒன்றிய தலைவர் என்ற முறையில் தானும், முன்னாள் மாநில மண்டல தலைவர் திரு. கணபதி நடனம், இன்னாள் மாநில துணைத்தலைவர் திரு. இராமநாதன், மண்டல செயலாளர் திரு. இராமசெல்வம் ஆகியோருடன் கலந்து கொண்டது மகிழ்ச்சியான தருணம் என்று கூறினர். பின்பு நெடுங்காடு சங்க கட்டமைப்பு, மற்றும் அதன் சிறந்த செயல்பாடுகள் பற்றியும், சங்க நிகழ்வுகள் பற்றியும் வெகுவாக பாராட்டி பேசியதோடு, நன்றி தெரிவிக்கப்பட்டு, கூட்டம் இனிதே நிறைவேறியது.

- B. இலட்சுமணன், தலைவர்.
9443783743

## 80 இராதாநல்லூர் :

சங்க கூட்டம் 11–5–2025 அன்று சங்க தலைவர் அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் சங்க இணைச்செயலர் காதி S.G. சந்தோஷ்குமார் அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மே மாதத்தில் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. சீர்காழி மண்டலத்துணைத் தலைவர் திரு. M. சிங்காரவேலன் அவர்கள் மூலம் தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பிற்கு 2025 – 26–ம் ஆண்டிற்கான ராதாநல்லூர் சங்க சந்தாதொகை ரூ. 500/– செலுத்தப்பட்டு உரிய ரசீதினை பொருளாளர் திரு. M. சீனிவாசன் அவர்கள் வசம் அளித்த மண்டல துணைத்தலைவர் திரு. M. சிங்காரவேலன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. நமது சங்க கௌரவத்தலைவர் திரு. K. இராமசுப்ரமணியன் B.Sc, M.A., MEd தலைமை ஆசிரியர் பணி நிறைவு அவர்கள் திருவெண்காடு வடக்கு வீதி ஸ்ரீ பாலாஜி நகரில் 4–5–2025 அன்று புதிய இல்ல புதுமனை புகுவிழாவும், அவர்களின் பெயர்த்தி செல்வி மு. யாழிசையின் திருவிளக்கீடு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவின் அழைப்பினை ஏற்று நமது சங்க பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், மகளிர் அணி தலைவி, செயலர் மற்றும் பொருளாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. 80. இராதாநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோயில் திருவிழா 11 நாட்கள் சிறப்பாக நடைபெற உதவி செய்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. சங்க பொருளாளர் திரு. M. சீனிவாசன் M.A., B.Ed அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- T. முத்துக்குமரசாமி,
தலைவர்.
9443645646

## நெடுங்காடு :

காரை மாவட்ட கார்காத்த வேளாளர் சங்கத்தின் 47–ஆம் ஆண்டு சித்திரை நிறைமதி நாள் விழா மற்றும் விசுவாவசு ஆண்டு புதிய பொறுப்பாளர்கள் தேர்வு 12–05–2025 அன்று சங்கத்தலைவர் திரு. K. மோகன்தாஸ் அவர்கள் தலைமையில் நெடுங்காடு கார்காத்தார் தெரு திரு. G. சத்தியபாலன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. 85 உறுப்பினர்கள் விழாவில் கலந்து கொண்டனர். திரு. T. கோபால் இறைவணக்கம் பாடினார். திரு. G. செல்வகுமார் வரவேற்புரை ஆற்றினார். சங்க ஆண்டறிக்கையை செயலர் திரு. S. ரங்கநாதன் அவர்களும், பொருளறிக்கையை திரு. M. கந்தன் அவர்களும், கார்நிதிய அறிக்கையை திரு. S. சந்திரசேகரன் அவர்களும், கல்விநிதி அறிக்கையை திரு. M. முத்துக்குமரன் அவர்களும் வாசித்தளித்தனர்.

இவ்விழாவில் சஷ்டியப்த பூர்த்தி கண்ட சங்க உறுப்பினர்கள் திரு. S. மணிகண்டன் – லல்லி, திரு. M. முத்துக்குமரன் – மாலதி, AVC பொறியியல் கல்லூரி முதல்வர். திரு. ப. பாலசுப்ரமணியன், பணி நிறைவு பெற்ற ஆசிரியை திருமதி. ஆபூர்வம் நமச்சிவாயம் மருத்துவப் பட்டம் பெற்ற கல்லூரி மாணவி செல்வி. நிவேதா நெடுஞ்செழியன், புதுச்சேரி மாநில கிரிக்கெட் அணி (U-15) வீராங்கனை செல்வி. அகல்யா முத்துக்குமரசாமி ஆகியோருக்கு பாராட்டு நடைபெற்றது. அவர்களை வாழ்த்தி சங்க உறுப்பினர்கள் ரு. நெடுஞ்செழியன், முனைவர் திரு. மு. வேணுகோபால், திரு. சு. இராசேசுவரன் செல்வி. அ. அல்லி ஆகியோர் பேசினர்.

விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர். திரு. K.K.R. சுரேஷ், பொருளாளர் திரு. G. ராமநாதன் அமைப்புச் செயலாளர் திரு. கைலை. சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

தலைவர் அவர்கள் தனது வாழ்த்துரையில் காரைக்கால் சங்க முன்னோடிகளை பாராட்டி பேசினார். காரைக்கால் சங்கத்திற்கு சொந்த இடம் வாங்க தன்னாலான முயற்சிகளை செய்வதாக உறுதியளித்தார். ஆகஸ்ட் 2023–ல் அகால மரணமடைந்த காரைக்கால் சங்க கார்நிதியச் செயலர் திரு. செல்வம் அவர்களுக்கு வாழ்வாதார நிதியாக மெய்கண்டார் அறக்கட்டளை மூலம் ரூ. 50000/– திருமதி. குருலட்சுமி செல்வம் அவர்களிடம் மாநிலப் பொறுப்பாளர்கள் வழங்கி ஆறுதல் தெரிவித்தனர். மாநில பொருளாளர் அவர்கள் வாழ்த்துரையில் காரைக்கால் சங்கம் பாரம்பரியம் மாறாமல் இயற்கையோடு இணைந்து இவ்விழாவை கொண்டாடுவதற்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

மாநில அமைப்புச் செயலாளர் அவர்கள் தம் வாழ்த்துரையில் நமது இனப் பெருமைகளையும் மாநில சங்க செயல்பாடுகளையும் குறித்து வாழ்த்திப் பேசினார்.

இறுதியாக செம்பொன் கணபதிநடனம் பிள்ளை அவர்கள் விசுவாவசு ஆண்டின் புதிய பொறுப்பாளர்களை தேர்வு செய்து வாழ்த்துரை வழங்கினார். காரைக்கால் சங்கத்தின் மூலம் கல்வி நிதி பெற்று பணியில் சேர்ந்த திரு. R.S. பிரகாஷ்ராம் (தா/பெ திருமதி. K.V. விஜயா) அவர்கள் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் ரூ. 10,000/– கல்வி நிதியாக அளித்துள்ளார். அவருக்கு சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

முனைவர் திரு. S. மணிகண்டன், முனைவர். திரு. ப. பாலசுப்ரமணியன், திருமதி. அபூர்வம் நமச்சிவாயம் ஆகியோர் தங்களின் பாராட்டிற்கு நன்றி தெரிவித்து ஏற்புரை வழங்கினர். G. முத்துக்குமரசாமி அவர்கள் நன்றி கூற விழா நிலா விருந்துடன் இனிதே நிறைவுற்றது.

விசுவாவசு ஆண்டு புதிய பொறுப்பாளர்கள் :

தலைவர் : திரு. K. மோகன்தாஸ் – **9842470343**

துணைத்தலைவர் : திரு. உ. ராகவன் – **9965608360**

செயலாளர் : திரு. S. ரங்கநாதன் – **9486898194**

துணைச்செயலர் : திரு. M. கந்தன் – **9385808597**

பொருளாளர் : திரு. M. கந்தன் – **9385808597**

மகளிரணி தலைவி : திருமதி. அபூர்வம் நமச்சிவாயம் – **8610019055**

இளைஞரணி தலைவர் : திரு. K. கோவிந்தராஜ் – **9597702870**

– G. முத்துக்குமரசாமி,
மாநில சங்க மண்டலச் செயலர்.
**9842633663**

## கும்பகோணம் :

சங்கம் மாதாந்திர கூட்டம் **26–4–2025** அன்று ராஜேந்திரன் பேட்டை நெல்லுக்கடைத்தெரு, திரு. என். ராஜா அவர்கள் இல்லத்தில் துணைத்தலைவர் பாலகுரு அவர்கள் தலைமையில் துணைத்தலைவர் திரு. ராஜாராம் மண்டல துணைத்தலைவர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. அனைவரையும் எம்.ஆர்.கே. பாண்டியன் அவர்கள் வரவேற்றார்கள் செயலாளர் அறிக்கையை விஜயகுமார் சமர்ப்பித்தார்கள் மங்கல சந்திப்பு வரவு செலவு கணக்கு பொருளாளர் ஏ.எஸ். பழனி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. புரவலர் நிதி அறிக்கையை சாமிநாதன் அவர்கள் வழங்கினார்கள் பசிப்போர் புசிக்க அறிக்கையும் குணசீலன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. ஆண்டு விழா மற்றும் பொதுக்குழு ஜுன் மாதம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

பஹல்காம் தாக்குதலில் உயிரிழந்த **26** பேருக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சங்க உறுப்பினர்கள் கே.எஸ். சிவகுமார் கே. திருநாவுக்கரசு சரோஜா துரைக்கண்ணு ஆகியோர் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் திரு. ஏ.எஸ். பழனி அவர்கள் நன்றி கூறினார்கள்.

– எஸ். விஜயகுமார், செயலாளர்.

## திருவிடைமருதூர் :

சங்கத்தின் கூட்டம் **24–05–25** அன்று சூரியனார் கோவில் திரு. K. இளஞ்செழியன் அவர்கள் இல்லத்தில் திரு. கணபதி பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிடைமருதூர் சங்க மையத்தலைவர் திரு. K. சுந்தர் பிள்ளை முன்னிலை வகித்தார்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் இனிதே துவங்கியது. சூரியானார் கோவில் பொறுப்பாளர் திரு. K. இளஞ்செழியன் வரவேற்புரை ஆற்றினார். அடுத்து உரையாற்றிய செயலர் திரு. G. பொற்செழியன் சூரியானார் கோவில், திருமாந்துறை, திருவிடைமருதூர், திருவாவடுதுறை மற்றும் கெளுத்தூர் நம் உறவுகளை வரவேற்றார். வரும் ஆகஸ்டு மாதத்தில் மகளிர் மாநாடு நடைபெற இருக்கும் விவரம் பற்றி கூறி அது தொடர்பாக வரும் **01–06–25** ஞாயிறு அன்று காலை **10** மணி அளவில் நம் மாநில சங்க முன்னாள் பொருளாளர் திரு. T.M.V. இல்லத்தில் ஆயத்த கூட்டம் நடைபெறும் விபரம் தெரிவிக்கப்பட்டது. அதில் மகளிர் அணி சகோதரிகள் திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொண்டார். அடுத்து பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் **467** மதிப்பெண்கள் பெற்ற செல்வி. தன்யஸ்ரீயை பாராட்டி மையத்தலைவர் திரு. K. சுந்தர் பொன்னாடை அணிவித்தார்.

அதே போல் **10**–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் **325** மதிப்பெண்கள் பெற்ற செல்வன் அன்புச்செல்வன் பொன்னாடை அணிவித்து பாராட்டப்பட்டார். இவ்வூரில் வாழ்ந்து மறைந்த நம் முன்னோர்களின் வானின்று வாழ்த்துக்களை பெற இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. செயலர் கல்வியின் அவசியம் குறித்தும் நம் வாரிசுகளுக்கு சிறப்பான கல்வி அளிக்கப்படல் வேண்டும் என்றும் கூறினார். கல்வி செல்வம் மட்டுமே கள்வரால் களவாட முடியாத செல்வம் என உரைத்தார். நம் இந்தியா வளரும் நாடு, நாம் ஒவ்வொருவரும் சிறப்பான கல்வி பெற்றால் தான் நாடும் விரைந்து முன்னேறும், நாமும் உயரலாம் எனக் கூறினார். இறுதியாக மகளிர் அணி திருமதி. கௌரி சூரியமூர்த்தி நன்றி கூறினார். எளிய தேநீர் விருந்துடன் கூட்டம் நிறைவுற்றது.

– க. பொற்செழியன், செயலர்.

**திருச்சி**

சங்கத்தின் தேர்தல் மற்றும் பொதுக்குழு கூட்டம் 25–05–2025 அன்று தில்லைநகர், கௌரி கிருஷ்ணா ஹோட்டலில் தலைவர் M. பாலசுப்ரமணியன். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 2025 – 2026 –ஆம் ஆண்டிற்கான நிர்வாகிகள் தேர்தலில் போட்டியின்றி அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக சங்க தேர்தல் அலுவலர் Er.S. சோமசுந்தரம் அவர்கள் தேர்தல் முடிவை அறிவித்தார்கள்.

புதிய தலைவராக திரு. மு. சிவகுருநாதன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். (புதிய நிர்வாகிகள் பட்டியல் வண்ண புகைப்படத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) முன்னாள் தலைவர் M. பாலசுப்ரமணியன் அவர்கள் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சங்கத்தை சிறப்பாக வழி நடத்தி சென்றதை பாராட்டி திருமண தகவல் மையத்தின் அமைப்பாளர் நவிலு. திரு. N.B. பாலசுப்ரமணியன் அவர்கள் பொன்னாடை அணிவித்து அவரின் சேவைகளை பாராட்டி பேசினார்கள்.

செயலாளர் C. சுப்ரமணியன் அவர்கள் 2024–2025–ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் N. பாண்டியன் அவர்கள் 2024 – 2025–ம் ஆண்டிற்கான வரவு – செலவு கணக்கு அறிக்கை தாக்கல் செய்தார்கள். புதிய தலைவர் ஏற்புரையில் சங்கத்தின் மீது தனக்கு எப்போதும் மிகுந்த ஈடுபாடு உண்டு என்பதை சுட்டிக்காட்டி, சங்கத்தை சிறப்பாக கொண்டு செல்வோம் என்று கூறினார்கள்.

துணைச் செயலாளர் V. குணசேகர் நன்றியுரையுடன் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரின் முழு ஒத்துழைப்புடன் கூட்டம் மதியம் 1.00 மணி அளவில் அறுசுவை விருந்துடன் இனிதே நிறைவுற்றது.

- C. சுப்ரமணியன்,
செயலாளர்.

**செந்துறை :**

சங்க கூட்டம் 04–05–2025 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் திரு. த. வைத்தியநாதன் அவர்கள் தலைமையேற்றார். சங்கச் செயலாளர் திரு. சா. ஜெயராமன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இக்கூட்டத்தில், நமது சங்க உறுப்பினர்கள் திரு. மு. செல்வராசு அவர்களின் மனைவி திருமதி. ஜெயலெட்சுமி என்கிற ஆண்டாள் ஆச்சி அவர்கள் 14–03–2025 அன்று இயற்கை எய்தியதற்கும், மற்றும் வங்காரம் திரு. சீனுவாசன் பிள்ளை அவர்கள் 29–04–2025 அன்று வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தியதற்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

13–04–2025 அன்று திரு. கோ. செல்வவிநாயகம் – திருமதி. அ. அமுதா தம்பதியர்க்கு திருக்கடையூர் அருள்மிகு அபிராமி அம்மன் சமேத ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் சஷ்டியப்த பூர்த்தி விழா சிறப்புடன் நடைபெற்றது. இத்தம்பதியருக்கு நமது சங்கத்தின் சார்பில் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் சங்க வளர்ச்சி பற்றி விரிவாக ஆலோசிக்கப்பட்டது. சங்கப் பொருளாளர் திரு. அ. மணி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

S. ஜெயராமன்,
செயலாளர்.

**மதுரை :**

18–5–2025 அன்று செயற்குழு கூட்டம் முனைவர். K. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநில துணைதலைவர் S. உமைபொருபாகம் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் T. ராதாகிருஷ்ணன், C. கார்த்திகேயன், R. பசுங்கிளி, S. மாணிக்கவாசகம், மகளிர் அணி தலைவி குமாரி லெட்சுமி, மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நமது மூத்த சங்க உறுப்பினர் பொதும்பு தெய்வதிரு. மணியப்ப பிள்ளை அவர்கள் மனைவி திருமதி. அருணாசலத்தம்மாள் மற்றும் மூத்த சங்க உறுப்பினர் கூத்தியான்குண்டு S. சுந்தரேசன் பிள்ளை அவர்கள் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10–ம் தேதி குடந்தையில் நடைபெறும் கார்குல மகளிரின் கலாச்சார விழா போட்டிகள் கலந்து கொள்வது சம்மந்தமாக ஆலோசனைகள் பெறப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சங்க பொருளாளர் வழக்கறிஞர் S. முருகன் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- B. ரவிச்சந்திரன்,
செயலாளர்.
9443831474

## ஆழ்வார்குறிச்சி

குலதெய்வம் (தனவாருடை கோத்திரம்) ஆழ்வார் குறிச்சி அருள்மிகு வடக்குவாய்ச்செல்லி அம்பாளுக்கு விசுவாவசு வருடம் ஆனி மாதம் 23–ஆம் நாள் திங்கட்கிழமை (07–07–2025) அன்று காலை 6–12 மணிக்கு மேல் 6–32 மணிக்குள் கும்பாபிஷேகம் நடத்த அம்பாள் அருளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விழா சீரும் சிறப்புமாக நடைபெற தங்கள் மேலான நன்கொடைகளை கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்து அம்பாளின் அருளாசிக்கு பாத்திரமாகும்படி வேண்டிக் கொள்கிறோம்.

L.P. THANGAVELU & S. THILLAINAYAGAM, TAMIL NADU GRAMA BANK . ALWARKURICHI. PO. A/c No. 10076750473, IFSC CODE : IDIB OPLB 001.

விழாவினில் கலந்து கொண்டு சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறோம்.

– விழாக்குழுவினர்.

## திருநெல்வேலி :

04–05–2025 அன்று கார்காத்தார் சங்க கட்டிடத்தில் கார்குல கர்ணன் வெங்கடேசன் பிள்ளை அரங்கத்தில் தலைவர் C. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. முருக இளங்கோ இறைவணக்கம்பாடி செயலர் வரவேற்புரை ஆற்றினார்கள். பொருளாளர் வரவு செலவு கணக்கு தாக்கல் செய்தார்கள் தலைவர் உரையில் 107–வது ஆண்டு விழா ஆகஸ்ட் மாதம் நடத்துவதும், வழக்கம் போல் நன்கொடை பிரித்து மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கவும், 10, 12 வகுப்பு அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு I, II, III பரிசு வழங்கி கௌரவபடுத்தவும் பரலி சு. நெல்லையப்பர் பிறந்த நாள் அன்று அவருடைய வாழ்க்கை வரலாறு, சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டது பற்றி சிறு புத்தகம் தயார் செய்து வெளியிடுவது என தீர்மானிக்கப்பட்டது. கணபதியா பிள்ளை இணை செயலாளர் நன்றி கூறி கூட்டம் முடிவுற்றது.

12–05–2025 அன்று சித்ரா பௌர்ணமி அன்று டவுன் கார்காத்தார் சங்க கட்டிடத்தில் கார்குல கர்ணன் வெங்கடேசன் பிள்ளை அரங்கத்தில் மாலை 6 மணி அளவில் மகளிர் அணி தலைவி கோ. பத்மாவதி தலைமையில் 40 நபர்கள் விளக்கு பூஜையில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

– செயலர்,

செ. இராமசுப்பிரமணியன்.

## கோவை :

நமக்குள்ளான தொடர்பை அதிகப்படுத்த பகுதி வாரியாக நம் மாதாந்திர கூட்டத்தை ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பகுதியில் நடத்தினால் அந்தந்த பகுதி நம் உறவுகள் சந்தித்துக் கொள்ள வசதியாக இருக்கும் என்ற ஆலோசனைக்கு ஏற்ப மே மாத சங்க கூட்டம் 11–05–25 அன்று சூலூரில் உள்ள திரு. சங்கர சுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. திருமதி. சரண்யா ரத்தினம் அவர்கள் இறைவணக்கம் பாடினார்கள். தலைவர் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். உறுப்பினர்கள் அனைவரும் அறிமுகப்படுத்திக்கொண்டனர்.

திரு. சங்கர சுப்பிரமணியம் அவர்கள், உணவே மருந்து என்ற தலைப்பில் உடல் நலம் பற்றியும், மனநலம் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்கள். எளிய பயிற்சி முறைகளையும், தியான முறைகளையும், சத்தான உணவு தயாரிக்கும் முறைகளையும் மிக எளிமையாகவும் அனைவருக்கும் புரியும்படியும் பேசினார்கள். உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர். திரு. கருணாநிதி அவர்கள், திரு. சங்கர சுப்பிரமணியம் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டினார்கள்.

நடந்து முடிந்த பிளஸ்டூ தேர்வில் வெற்றி பெற்ற நம் சொந்தங்களின் பிள்ளைகளுக்கு வாழ்த்துக்கள் சொல்லப்பட்டன. தேர்வில் வெற்றி பெற்று நல்ல மதிப்பெண்கள் வாங்கிய சண்முகசுந்தரத்தின் மகன் விஷால் அவர்களுக்கு கௌரவத் தலைவர் திரு. சோமசுந்தரம் அவர்கள் வாழ்த்துக்கள் கூறி பொன்னாடை அணிவித்தார்கள்.

திருமதி. மதிவர்ஷினி சங்கர சுப்பிரமணியம் அவர்களுக்கு திருமதி. சரண்யா ரத்தினம் அவர்கள் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள்.

திரு. சிவராஜகோபால் அவர்கள் நன்றி கூறினார்கள்.

# CREW PUBLIC CHARITABLE TRUST

40, சப்தகிரி காலனி, சென்னை–83.

## சங்க நிர்வாகிகளுக்கு அன்பான வேண்டுகோள்.

வரும் 2025 – 2026–ஆம் கல்வி ஆண்டிற்கு, கலை மற்றும் அறிவியல், பொறியியல், மருத்துவம், பாலிடெக்னிக், I.T.I. படிக்கும் ஏழ்மையான மாணவ, மாணவியர்களை மட்டும், கல்வி உதவிக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்தவும்.

கல்வி உதவித்தொகையை ஏற்கனவே வாங்கிய மாணவர்கள், தங்கள் விண்ணப்பங்களில் கடந்த ஆண்டுகளில் பெற்ற உதவித்தொகையைத் தவறாமல் குறிப்பிட்டு, அறக்கட்டளைக்கு நேரடியாக அனுப்பி உதவித்தொகையைப் பெறலாம்.

ஏற்கனவே அறிமுகமான மாணவர்களின் விண்ணப்பங்களை, நேரடியாக அறக்கட்டளைக்கு அனுப்ப சங்க நிர்வாகிகள் அறிவுரை கூற வேண்டுகிறோம்.

வேறு அறக்கட்டளையிலிருந்து, உதவித்தொகை பெற்ற மாணவர்களின் விண்ணப்பங்களை பரிந்துரை செய்ய வேண்டாம்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கிளைச் சங்கங்களின் நிர்வாகிகள், மாநில சங்கத்திடமிருந்து பெற்ற அங்கீகார கடிதங்களின் நகல்களுடன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

சம்பந்தப்பட்ட கிளைச்சங்கங்களின் கீழ் உள்ள ஊர்களிலுள்ள மாணவ மாணவிகளின் விண்ணப்பங்களை மட்டும் பரிந்துரை செய்து அனுப்பவும். இதர ஊர்களிலுள்ள மாணவ மாணவிகளின் விண்ணப்பங்களை பரிந்துரைக்க வேண்டாம்.

கிளைச்சங்கங்களில் நிர்வாகிகளாகப் பணிபுரிந்தபின், விலகிய முன்னாள் நிர்வாகிகள், பரிந்துரைத்த விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கார்காத்தார் ஒப்புரவு இதழில் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்தை கிழித்து அல்லது XEROX நகல் எடுத்து அனுப்ப வேண்டாம். கணினியில் டைப் செய்து உபயோகிக்கவும்.

கல்லூரியில் முதலாம் ஆண்டு சேரவிருக்கும் மாணவ மாணவிகள் கவுன்சிலிங் முடித்து கல்லூரி கட்டணம் கட்டிய (நகல்) ரசீதுடன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

மாணவ மாணவிகளின் விண்ணப்பங்களில் பரிந்துரை செய்யாமல், சங்க நிர்வாகிகள், அவர்களின் Letter Pad களில் அல்லது தனியாகக் கடிதங்களின் பரிந்துரை செய்து, அதில் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.

தந்தையை இழந்த / பிரிந்த மாணவ மாணவிகளின் பள்ளிக்கல்வி விண்ணப்பங்களையும் நன்றாக பரிசீலித்த பிறகு அனுப்பலாம். சங்க நிர்வாகிகள், தாங்கள் அனுப்பும் விண்ணப்பங்களுக்கு வரிசை எண்கள் கொடுக்கவும்.

மாணவர்களிடமிருந்து பெறப்படும் அசல் விண்ணப்பங்களை CREW அறக்கட்டளைக்கு அனுப்பி, நகலை, சங்க நிர்வாகிகள், தங்களுடன் வைத்திருக்கவும்

மேற்படி விண்ணப்பங்களை சரிபார்த்து பரிசீலனை செய்து, ஏழ்மையான மாணவர் / மாணவி என்பதை உறுதிசெய்த பிறகு, தலைவர், செயலர் ஆகிய இருவரும் கையொப்பமிட்டு CREW அறக்கட்டளை, சிறுசேரி என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 15–06–2025–க்குப் பிறகு அனுப்பவும்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 30–11–2025 முடிய பெறப்படும்.

மாதிரி விண்ணப்பம் மற்றும் STAMP RECEIPT இத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.


**தி.நெ. முத்துகுமாரசாமி**
கௌரவ ஆலோசகர்.
9445451604
044 4741 4708

**ச. வெங்கடேசன்**
தலைவர்
CREW அறக்கட்டளை

**CREW அறக்கட்டளை,**

40 சப்தகிரி காலனி, சென்னை – 83

## கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பம்

***(கல்லூரி மாணவ, மாணவிகள் மட்டும் விண்ணப்பிக்கவும்)***

அனுப்புநர், தேதி : / / 2025

பெறுநர் :

நிறுவனர் அவர்கள்
CREW PUBLIC CHARITABLE TRUST
சென்னை–603 103.

பொருள் : கல்வி உதவித்தொகை விண்ணப்பம் சமர்ப்பிப்பது – தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

CREW PUBLIC CHARITABLE TRUST மூலம் என்னுடைய கல்லூரி கல்விக்காக (College Study), தாங்கள் பண உதவி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் தேவையான விபரங்களை கீழே கொடுத்துள்ளேன்.

1. மாணவன் / மாணவி பெயர் :
2. தந்தை / தாய் / காப்பாளர் பெயர் :
3. மாணவன் / மாணவி முழுமையான நிரந்தர முகவரி :
4. தொலைபேசி, கைபேசி எண் :
5. (2025–26) கல்விஆண்டில் படிக்கப்போகும் வகுப்பு :
   (கல்லூரியில் எந்த ஆண்டு என்று அவசியம் குறிக்கவும்)
6. படிக்கும் கல்லூரி விபரங்கள் :
7. கல்லூரி படிப்பிற்கு அரசு ஒதுக்கீடு 7.5 % யின் கீழ்
   தேர்ந்தேடுக்கபட்டவரா : ஆம் ............., இல்லை............. :

   தமிழ் புதல்வன் திட்டத்தின்
   கீழ் தேர்ந்தேடுக்கபட்டவரா ஆம் ............., இல்லை............. :

   புதுமைப் பெண் திட்டத்தின்
   கீழ் தேர்ந்தேடுக்கபட்டவரா ஆம் ............., இல்லை............. :
8. கல்லூரியிலிருந்து பெற்ற உத்தேச
   கல்விக் கட்டணத்தின் நகல்: (Estimate Copy) :

9. கடந்த தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் நகல் :

10. பெற்றோர்கள் பார்க்கும் தொழில் மற்றும் மாத வருமானம் :

11. பெற்றோர்களின் தொலைபேசி/கைபேசி எண் :

12. சென்ற ஆண்டுகளில் CREW அறக்கட்டளை :

| | | | |
|---|---|---|---|
| மூலம் பெற்ற தொகை | 1. | 2021 – 2022 ..................... | : |
| | 2. | 2022 – 2023 ..................... | : |
| | 3. | 2023 – 2024 ..................... | : |
| | 4. | 2024 – 2025 ..................... | : |

13. சென்ற ஆண்டு மற்றும் இந்த ஆண்டு கட்டிய கல்விக்கட்டண ரசீதுகளின் நகல்களை இணைத்துள்ளேன் } ரசீது எண் தொகை தேதி

14. குறைந்த பட்சம் தேவைப்படும் தொகை: ரூபாய் :

15. குடும்பத்தில் முதல் பட்டதாரியா : ஆம் , இல்லை

16. மாணவர் அல்லது பெற்றோரின் நடப்பில் உள்ள வங்கி கணக்கு விபரங்கள் (தெளிவாக) (Account must be ACTIVE) : }

17. வங்கியின் பெயர் மற்றும் கிளை :

18. கணக்கு வைத்திருப்பவர் பெயர்

19. வங்கி கணக்கு எண் :

20. வங்கி கணக்கு எண்ணுக்குரிய IFSC Code விபரம் :

21. வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் நகலை அல்லது Cancel செய்த ஒரு காசோலை (செக்) நகலை இணைக்கவும். : }

நன்றி

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

பூர்த்தி செய்த விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி :
CREW TRUST
No. 9 / D-12, Sipcot IT Park,
Siruseri, Chennai - 603103.
Mobile No. 94454 51604, 044 - 4741 4708

1) மாணவன் / மாணவி கையொப்பம்.

2) தந்தை / தாய் / காப்பாளர் கையொப்பம்

## CREW PUBLIC CHARITABLE TRUST

Registered Document No. 290/2010

40, Sapthagiri Colony, Jafferkhanpet, Chennai-83

DATE..........................2025

**PAYMENT CUM RECEIPT**

Received with thanks from the CREW Public Charitable Trust a sum of Rs................ (Rupees......................................................) having been deposited in ........................................... ........... Bank .....................................Branch, A/C No. ............................................................for my studies at the institution .................................................................... / as a helping measure towards my livelihood.

Revenue Stamp

Receiver's Signature

Name ........................................................

Address ......................................................

.....................................................................

Mobile (Cell) No...........................................

Encl: Xerox Copies of Receipts of tuituion fees etc.,

### L4 L5 DISC BUGE (Sciatica).

### டிஸ்க் பிரச்சனை

Dr. S. விஜயா பிசியோதெரபிஸ்ட், 9445331014

disc bulge டிஸ்க் பிரச்சனை வந்தால் முதுகிலிருந்து பாதம் பெருவிரல் வரை நரம்பு பிடித்து இழுப்பது, Shock அடிப்பது போல வலி முக்கியமாக இருமும் போது, குனியும் போது 'மின்னலே' அடித்தது போன்ற வலி, பலருக்கு கால் பாதம் கெண்டை தசை எல்லாம் மரத்துவிடுகிறது. வலி தீவிரம் ஆகும் வரை Pain Killer, கை வைத்தியம் என்று சில மாதங்கள் தள்ளி விடுகிறார்கள். பிறகு General Dr & ortho Dr பார்த்து மாத்திரையுடன் அவர்களிடம் உள்ள பிசியோதெரபியிடம் ஒரு வாரம் IFT (Traction) எடுத்து வலி குறைகிறது. சில மாதங்களில் மீண்டும் வலி மீண்டும் வலி மாத்திரை, தூக்க மாத்திரை, விட்டமின் MRI - எடுத்து disc வெளியே வந்து Sciatica நரம்பு அழுந்துகிறது, பிசியோதெரபி ஒரு வாரம் 10 நாட்கள் எடுத்தும் வலி வருவதால் அறுசை சிகிச்சை பண்ண வேண்டும் என்கிறார்கள்.

1) ஏன் Disc bulge மீண்டும், மீண்டும் வருகிறது.

2) அறுவை சிகிச்சை அவசியமா?

3) பிசியோதெரபியில் வலி தீருமா?

Discbulgeவட்டுநகருதல் ஒரு மெக்கானிக்கல் பிரச்சனை. இதற்கு மருந்து தற்காலிகமாக வலி தெரியாமல் மட்டுமே பண்ண முடியும்.

ஒரு வாரம் – 10 நாட்களில் வலி நன்கு குறைந்து விட்டதும் சிகிச்சையை நிறுத்த கூடாது. வலி குறைந்த பின்பு அளிக்கும் சில சிகிச்சையும் பயிற்சியும் ஆழத்தில் உள்ள 'CORE' பிரச்சனையை சரி செய்யும். அதனால் வலி தீரும்.

பெரும்பாலானவர்கள் 60% better ஆனதும் சிகிச்சை 1 பயிற்சியை விட்டுவிடுவார்கள். 2–3 மாதத்தில் மீண்டும் வலி வரும். பின்பு வேறு Dr (or) வேறு மருத்துவ முறைக்கு செல்வார்கள். ஆனால் பிசியோதெரபி சிகிச்சையை வலி குறைந்தாலும் தொடர்ந்து எடுத்து – வலி இல்லாமல் இருந்தாலும் பிசியோதெரபி மேற்பார்வையில் மட்டுமே பயிற்சி செய்ய Disc bulge வலி தீர வழி உள்ளது.

வலி தீர வழி.

1) பிசியோதெரபி சிகிச்சை

2) பிசியோதெரபி மேற்பார்வையில் ( on line & off line) பயிற்சிகள் குறைந்தது 3–6 மாதம்

3) உடல் எடை குறைப்பு

4) தொப்பை குறைப்பு

5) Vit D3, vi+B12, Hb% test செய்து vitamin மாத்திரை மருத்துவ அறிவுரைப்படி எடுப்பது

6) வெயில் 20 நிமிடம் படும்படி இருத்தல்.

இவை எல்லாம் செய்தால் disc bulge பிரச்சனை வலி தீரும்.

டிஸ்க் பல்ஜ் வலி தீர வழி உள்ளது.

# திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்
# மங்கல சந்திப்பு - 2025

## விண்ணப்பப் படிவம்

பெயர் :

பிறந்த தேதி :

நட்சத்திரம் :

ராசி :

கோத்திரம் :

உயரம் :

எடை :

நிறம் :

கல்வித் தகுதி :

பணி விபரம் :

பணிபுரியும் நிறுவனம்:

பணிபுரியும் ஊர் :

வருட வருமானம் :

தந்தையார் பெயர் :

தந்தையார் பணி :

தந்தையார் பூர்வீகம் :

தாயார் பெயர் :

தாயார் பணி :

தாயார் பூர்வீகம் :

சகோதரர்கள் விபரம் :

சகோதரிகள் விபரம் :

தொடர்பு முகவரி :

அலைபேசி எண் :

# திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்

பதிவு எண் : SRG / Trichy / 132 / 2024

## 22வது ஆண்டு மங்கல சந்திப்பு விழா

வணக்கம். திருச்சி கார்காத்தார் சங்கம் இதுவரை நடத்திய 21 மங்கல சந்திப்புகளின் மூலம் **1000**க்கும் மேற்பட்ட திருமணங்கள் நடந்துள்ளன. எங்களது ராசியான 22வது மங்கல சந்திப்பு இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெற உள்ளது.

### 22வது ஆண்டு மங்கல சந்திப்பின் சிறப்புகள் :

1. மங்கல சந்திப்பிற்கு வருபவர்களுக்கு காலை தேநீர், மதிய உணவு வழங்கப்படும்.
2. பெற்றோர் தங்களது வரனை அவர்களே அறிமுகம் செய்வது.
3. வரன்களை பற்றிய முழு புத்தகமும், வண்ண புத்தகமாக வரனின் படத்துடன் ( Full Book in Multi Color with Profile Photo) அச்சிடப்பட உள்ளது.

நாள் : **15.08.2025 வெள்ளிக்கிழமை**
நேரம் : காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
இடம் : **LKS மஹால், அரிஸ்டோ ரவுண்டானா,**
மத்திய பேருந்து நிலையம் அருகில், திருச்சி - 620 001.

**பதிவு கட்டணம் : ரூ.800/-** (புத்தகம் மற்றும் தபால் செலவு உட்பட).
**A/c Name : Trichy Karkatha Velalar Sangam, Indian Bank, Ponnagar Branch, Trichy-1. A/c No. 7947445069 IFSC : IDIB000P105** என்ற வங்கி கணக்கிற்கு **NEFT, Cheque, DD, Bank Transfer** அல்லது **QR Code** மூலம் பணம் அனுப்ப வேண்டுகிறோம்.

### முக்கிய குறிப்புகள் :

1. பணம் செலுத்திய ரசீது நகலை விண்ணப்பத்துடன் கட்டாயம் இணைத்து அனுப்ப வேண்டும்.
2. கண்டிப்பாக பாஸ்போர்ட் **Size** கலர் போட்டோ ஒன்று இணைக்க வேண்டும்.
3. இணைக்கப்பட்டுள்ள படிவத்தை மட்டும் முறையாக எல்லா காலங்களையும் விடுதல் இன்றி தமிழில் தெளிவாக பூர்த்தி செய்து பதிவு தபால் அல்லது கொரியர் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
4. அரங்கில் நேரடி பதிவு கிடையாது **(No Spot Registration)**
5. மங்கல சந்திப்பு அன்று வரனின் **Biodata** நகலும், ஜாதக நகலும், **Photos-2** எடுத்து வரவும்.
6. பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே புத்தகம் வழங்கப்படும்.

**விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி :**

**மணி பிரிண்டர்ஸ்,** C15/1, 5வது மெயின் ரோடு, இராமலிங்கநகர், உறையூர், திருச்சி - 620 003. **Cell : 98424 75125**

## பதிவுக்கு கடைசி நாள் : 31.07.2025

வாட்ஸ்அப் -ல் அனுப்பப்படும் பயோடேட்டா எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்பட மாட்டாது.

நவிலு. **N.B. பாலசுப்ரமணியன்**
அமைப்பாளர் / திருமண மையம்

**C.சபாபதி**
இணை அமைப்பாளர் **94459 17361**

**G.சிவகுருநாதன்**
தலைவர் / திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்
**98427 82837**

**C.சுப்ரமணியன்**
செயலாளர்
**98424 75125**

**N.பாண்டியன்**
பொருளாளர்
**94879 96520**

# திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்

பதிவு எண் : SRG / Trichy / 132 / 2024

**25.05.2025 அன்று நடைபெற்ற 2025-2028 ஆம் ஆண்டிற்கான நிர்வாகிகள் தேர்தலில் கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் அனைவரும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.**



க.சிவகுருநாதன்
தலைவர்



C.சுப்ரமணியன்
செயலாளர்



N.பாண்டியன்
பொருளாளர்

## துணைத் தலைவர்கள்



S.நடராஜன்



C.சபாபதி

## துணைச் செயலாளர்கள்



V.ராமகிருஷ்ணன்



V.குணசேகர்

## செயற்குழு உறுப்பினர்கள்



J.குமார்



P.மனுநீதிசோழன்



G.V.சரவணன்



V. கொளஞ்சிகண்ணன்



M.சிவகுமார்



R.கணேசன்



V.ரவி



R.சிவராமகிருஷ்ணன்



S.ராஜகுமார்

# வாழ்த்துகிறோம்



அகவை 80 காணும் கார்குல வள்ளல்

## திரு. ச. வெங்கடேசன் பிள்ளை

## திருமதி ஞானாம்பிகை

தம்பதியினரை வணங்கி வாழ்த்துகிறோம்.

### தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

**Dr. KKR.K. சுரேஷ் (எ) ராஜசுந்தரம் பிள்ளை**
தலைவர்

**M. பாலசுப்ரமணியன் பிள்ளை**
பொதுச் செயலாளர்

**G. ராமநாதன் பிள்ளை**
பொருளாளர்

**கைலை. சண்முகம் பிள்ளை**
அமைப்புச் செயலாளர்

மாநில துணைத் தலைவர்கள், மண்டல செயலாளர்கள்,
இணைப்புச்சங்க நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள்,
இளைஞர் அணி நிர்வாகிகள், KBF நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்.

# வணங்கி மகிழ்கிறோம்

## 20.06.2025 பிறந்தநாள் மற்றும் சதாபிஷேக தம்பதிகள்

திரு. S. **வெங்கடேசன் பிள்ளை** அவர்கள்
(தலைவர், சென்னை ராதா இன்ஜினியரிங் நிறுவனங்கள்)
திருமதி. V. **ஞானாம்பிகை வெங்கடேசன்**



கலியுக கர்ணன் ....
கார்குல வள்ளல் .....
கல்வி கடவுள் .....
எங்களை வாழ வைக்கும் தெய்வத்திற்கு

**20.06.2025 80வது பிறந்த நாள் (மற்றும்) சதாபிஷேக வாழ்த்துக்கள்**

வாழ்த்தும் நெஞ்சங்கள்

காவனூர் **சி. தாண்டவமூர்த்தி - பூமதி**

மற்றும்

மகள் - மருமகன்
**M. அட்சயா முத்துகுமார்**
பேரன்கள்
**M. அவனிஷ்**
**M. கவிஷ்**

மகள் - மருமகன்
**A. ஐஸ்வர்யா அசோக்**
பேரன்
**A. வகீஷ்**

**80வது பிறந்த நாள் காணும் கலியுகக் கர்ணனை**
**கார்குல வள்ளல், ஏழையின் பங்காளன் அகவை எண்பது காணும்**

**சென்னை இராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் (பி) லிமிடெட்**

**தலைவர்**

திரு. **ச. வெங்கடேசன் பிள்ளை**

திருமதி. **ஞானஏம்பிகை ஆச்சி**

**தம்பதியினரை கை கும்பிட்டு வாழ்த்தி வணங்குகிறோம்**



திருமதி. **இராஜலெட்சுமி கலியபெருமாள்,** பூவை
திருமதி. **உஷா நாராயணன்,** கும்பகோணம்
திருமதி. **அர்ச்சனா சுதர்சன்,** பெங்களூர்
திருமதி. **சுகன்யா கார்த்திக்ராஜா,** சென்னை
திருமதி. **சுபாஷினி பாபு,** சிதம்பரம்
திருமதி. **சிவகாமி சண்முகநாதன்,** சென்னை
திருமதி. **சசிகலா ரவிந்தரன்,** சென்னை
திருமதி. **ஈஸ்வரி லோகநாதன்,** கடலூர்
திருமதி. **குணவதி நடனசபாபதி,** கார்மாங்குடி
திருமதி. **அருணா முத்துக்குமார்,** லண்டன்
திருமதி. **மல்லிகா வசந்த குமார்,** நெய்வேலி
திருமதி. **ஜெயபூரணி ஜெகன்னாதன்,** சென்னை
செல்வன். **மா. தனந்த் பாரதி** (B.E.,) செல்வன். **பா. சஞ்சய் பாரதி** (B.E.,)
செல்வி. **ர. நிவேதிகா** (B.E. Arct)
செல்வி. **மா. திவ்யபாரதி** (B.E.) செல்வி. **ர. கௌதமி**
திருமதி. **வினோஷா ஜெகந்நாதன்** - சென்னை
**நிவேதிகா கௌதமி** - சென்னை
திருமதி. **வசந்தகுமார் மல்லிகா** (பூவிழுந்த நல்லூர்) (பூவை)

# குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்கம் பதிவு எண். 18/2015

## 80வது பிறந்தநாள் காணும் கார்குல கர்ணன்

## கொடை வள்ளல் திரு. S. வெங்கடேசன் பிள்ளை

அவர்களை வாழ்த்தி வணங்குகிறோம்.

ஐயா அவர்கள் நீடுவாழ இறைவனை வேண்டுகிறோம்.



வணக்கத்துடன்

**S. இராமச்சந்திரன் பிள்ளை**
செயலர்

**A.G. சிவராமன் பிள்ளை**
தலைவர்

**R. திலகம்**
பொருளர்

**G. இராஜேந்திரன்**
ஒன்றிய பிரதிநிதி

**M. செந்தில் வேலாயுதம் பிள்ளை**
துணை செயலர்

**A. வேணுகோபால் பிள்ளை**
துணைத் தலைவர்

**S. சிவக்குமார் பிள்ளை**
துணைத் தலைவர்

# வாழ்த்துகிறோம்



அகவை 80 காணும் கார்குல வள்ளல்

## திரு. ச. வெங்கடேசன் பிள்ளை

## திருமதி ஞானாம்பிகை

தம்பதியினரை வணங்கி மகிழ்கிறோம்.

## போரூர் கார்காத்தார் சங்கம்

| K. பரமசிவம் | S. சந்திரமோகன் | A. ராமலிங்கம் |
|---|---|---|
| பொருளாளர் | செயலாளர் | தலைவர் |

மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்

# மணமகள் தேவை



| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. ரஞ்சித் |
| படிப்பு | M.C.A., |
| வேலை | Document Writing Service |
| | Rs. 60,000/PM |
| பிறந்த தேதி | 30.06.2000 |
| உயரம் | 5' - 10" |
| நட்சத்திரம் | ரோகிணி (4-ஆம் பாதம்) |
| கோத்திரம் | வேளா |
| பூர்வீகம் | சோழம்பேட்டை |
| தகப்பனார் | T. செல்வநேசன் (ஆவண எழுத்தர்) |
| தாயார் | S. சாந்தி |
| முகவரி | 2/116, பிரசாந்திபுரம், சித்தர்காடு |
| | மயிலாடுதுறை Tk & Dt. |
| | Cell : 94431 31262 / 94874 42190 |
| | 99652 88635 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் ம. ஹரீஷ் |
| படிப்பு | B.E., MBA., Ph.D., |
| வேலை | SAP Analyst, Infosys Ltd., Chennai |
| | Rs. 8,00,000/PA |
| பிறந்த தேதி | 12.12.1996 |
| உயரம் | 199 cm |
| நட்சத்திரம் | பூராடம் |
| கோத்திரம் | சேதுராய |
| பூர்வீகம் | மண்ணிப்பள்ளம் |
| தகப்பனார் | சே. மதியழகன் |
| | Mathi Harvesters (Agri Machinery Suppliers) |
| தாயார் | ம. கவிதா |
| முகவரி | செல்வமுத்துக்குமாரசாமி நகர், |
| | வைத்தீஸ்வரன் கோவில், சீர்காழி வட்டம் |
| | Cell : 94435 64218, 96592 96362 |
| விருப்பம் | பொருத்தமான வரன் |

# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி **B. SWATHI** |
| படிப்பு | B.Sc., Maths., MS Data Science.,USA |
| வேலை | Software Engineer,Tiami Networks,<br>Sacramento,California,USA |
| பிறந்த தேதி | 29-05-2001 |
| உயரம் | 170 cm |
| நட்சத்திரம் | AYILAM (4 ம் பாகம்) |
| கோத்திரம் | Santhanuda |
| பூர்வீகம் | Chidambaram (M.Udayur) |
| தகப்பனார் | **B. Babu** (Civil Eng Founder of Baas Construction) |
| தாயார் | **B. Vanitha** (Native -Meyyathur,) |
| முகவரி | 1/513, Periyar Salai,<br>Krishna Nagar,<br>Manapakkam, Chennai – 600 125.<br>Cell : 98844 22555, 98844 66222 |
| விருப்பம் | Looking for Groom, Preferably working in USA,<br>around her age, ideally within 3 to 4 years. |




| | |
|---|---|
| பெயர் | செல்வன் **K.C. முரளிகுமார்** |
| படிப்பு | M.B.B.S., |
| பிறந்த தேதி | 16.12.2000 |
| உயரம் | 5' - 10" |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | கனகராயர் |
| தகப்பனார் | **S. குமார்,** M.A., B.Ed., M.Phil.,<br>நிறுவனர், சுயநிதி பள்ளிக்குழுமங்கள் |
| தாயார் | **R. சித்ரா,** M.A., B.Ed.,<br>பட்டதாரி ஆசிரியை |
| முகவரி | 8/11,12, பதினாறுகால் மண்டபத் தெரு,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 94427 46728, 90950 04888 |
| விருப்பம் | M.B.B.S., |



# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வி M. தீபதாரணி** |
| படிப்பு | B.E. (ECE) |
| வேலை | LTI Mindtree, Chennai<br>Rs. 16.5 Lakhs/PA |
| பிறந்த தேதி | 10.11.1996 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | சுவாதி |
| கோத்திரம் | களப்பாள |
| பூர்வீகம் | இறையூர் (பெண்ணாடம்) |
| தகப்பனார் | **G. முருகேசன்,** Design Engineer, Oragadam |
| தாயார் | **P. நிர்மலா,** ஆசிரியை<br>அரசு மேல்நிலைப் பள்ளி<br>பள்ளிக்கரணை, சென்னை - 100. |
| முகவரி | 1/980, சௌமியா நகர்,<br>பெரும்பாக்கம், சென்னை - 600 100.<br>Cell : 94444 25342 (Whatsapp)<br>81225 88342 |
| விருப்பம் | சமபடிப்பு, சமவேலையில்,<br>சென்னையில் பணிபுரியும் வரன். |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி M. பத்மபூஷணி** |
| படிப்பு | M.Sc. (Cardio Technology) |
| வேலை | Asst. Professor in<br>Vinayaka Mission<br>Research Foundation,<br>Chennai |
| பிறந்த தேதி | 13.05.2000 |
| உயரம் | 5' - 5" |
| நட்சத்திரம் | உத்திரம் பாதம் 2 |
| கோத்திரம் | பொண்ணமுட |
| பூர்வீகம் | காவனூர் |
| தகப்பனார் | **M. முத்துக்குமாரசாமி,**<br>Foreign American Camp |
| தாயார் | **M. கவிதா,** இல்லத்தரசி |
| முகவரி | 381/7, முல்லைத் தெரு,<br>பெரியார் நகர் தெற்கு,<br>விருத்தாசலம் - 606 001.<br>Cell : 94869 11578, 82209 14976 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி பா. அர்ச்சனா** |
| படிப்பு | M.Sc. (Applied Mathematics) |
| வேலை | Software Engineer,<br>Cognizant Technology Solutions, Coimbatore |
| பிறந்த தேதி | 01.12.1999 |
| உயரம் | 5' - 5" |
| நட்சத்திரம் | உத்திரம் |
| கோத்திரம் | எருமலுட |
| பூர்வீகம் | கௌுத்தூர் |
| தகப்பனார் | **கோ. பாண்டியன்,**<br>Prop. Pandian Press Components,<br>(Sheet Metal Works & Fabricators) Coimbatore |
| தாயார் | **பா. சித்ராதேவி,** (ஆக்கூர்) |
| முகவரி | K.T.V. Nagar Sathy Road,<br>S.S. Kulam, Coimbatore<br>Cell : 89034 84054, 98940 54801 |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வன் இர. ஞானபிரகாசம்** |
| படிப்பு | B.Tech (Computer Science) |
| வேலை | Nat West Group, Chennai |
| | Rs. 27,00,000/PA |
| பிறந்த தேதி | 15.05.1985 |
| உயரம் | 5' - 10" |
| நட்சத்திரம் | உத்திரட்டாதி |
| கோத்திரம் | ஒகளுட |
| பூர்வீகம் | S.நரையூர், கடலூர் Dt. |
| தகப்பனார் | **ஆ. இரத்தினசபாபதி,** B.Sc., (Agri) JD (Agri), (Rtd.) விழுப்புரம் |
| தாயார் | **இர. தமிழரசி,** M.Phil., செந்துறை, அரியலூர் Dt. BT Asst., (Rtd.) Teacher நயினார்பாளையம் |
| முகவரி | 470/B2, பசுமை தெரு, பாலாஜி நகர், தெற்கு பெரியார் நகர், விருத்தாசலம் – 606 001. |
| | Cell : 97900 95725 / 944322 3983 |
| குறிப்பு | சட்டப்படி விவாகரத்து பெற்றவர். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் **கா. வருண் நேரு** |
| படிப்பு | B.Tech (IT) |
| வேலை | Specialist - Software Engineering |
| | L T I Mindtree, Chennai |
| | Rs. 14.5 Lakhs / PA |
| பிறந்த தேதி | 22.11.1986 |
| உயரம் | 166 cm |
| நட்சத்திரம் | பூசம் |
| கோத்திரம் | எரவுட |
| பூர்வீகம் | இறையூர் (பெண்ணாடம்) |
| தகப்பனார் | **மு. கார்த்திகேயன்** |
| தாயார் | **கா. தனலட்சுமி** (செந்துறை) |
| முகவரி | 174/2, கொத்தட்டை ரோடு, இறையூர் – 606 111. கடலூர் மாவட்டம் |
| | Cell : 98844 91678 |
| | E-mail : dhanamkarthi76@gmail.com |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் P. ஸ்டாலின்** |
| படிப்பு | B.E. (Civil) |
| வேலை | Assistant Manager - Civil |
| | L&T Construction, |
| | Larsen & Toubro Ltd. Bangalore |
| | Rs. 7,50,000/PA |
| பிறந்த தேதி | 16.03.1995 |
| உயரம் | 178cm |
| நட்சத்திரம் | பூரம் |
| கோத்திரம் | ஓகலுட |
| பூர்வீகம் | அவளிவநல்லூர், வலங்கைமான் (Tk) |
| தகப்பனார் | **S. புஷ்பநாதன்**, M.A., துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஓய்வு) ஊரக வளர்ச்சித்துறை |
| தாயார் | **P. இந்திராணி** (இல்லத்தரசி) மாடாகுடி, கும்பகோணம் Tk. |
| முகவரி | 86, செந்தமிழ் நகர், வலங்கைமான் Po & Tk., திருவாரூர் Dt. - 612 804. |
| | Cell : 94436 78542, 96008 48462 |
| | E-mail : pushpatnrdoa61@gmail.com |
| விருப்பம் | படித்து பணியில் உள்ள (அ) படித்து பணியில் இல்லாத வரன். |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் M. சாமிநாதன்** |
| படிப்பு | B.E. (Civil) |
| வேலை | Own Construction |
| | Sarveshwara Construction, |
| | Cholamadevi, Rs. 6 Lakhs/PA |
| பிறந்த தேதி | 09.06.1993 |
| உயரம் | 173cm |
| நட்சத்திரம் | அவிட்டம் 2ம் பாதம் |
| கோத்திரம் | சோமங்கலுட |
| பூர்வீகம் | ஆலவாய் (அரியலூர்) |
| தகப்பனார் | **மோகன சுந்தரம்** (லேட்) |
| தாயார் | **மலர்கோடி** |
| முகவரி | வெள்ளாளர் தெரு, அம்பிகாபுரம், சோழமாதேவி உடையார் பாளையம் Tk. அரியலூர் Dt. - 612 902. |
| | Cell : 99657 50981, 90032 79822 |



# சீர்காழி சங்க ஆண்டு விழா














# வாழ்த்துகிறோம்



அகவை 80 காணும் கார்குல வள்ளல்

## திரு. வெங்கடேசன் பிள்ளை

## திருமதி. ஞானாம்பிகை தம்பதியினர்

நீடூழி வாழ இறைவனை வணங்கி வாழ்த்துகிறோம்.

இவண்.

## கார்காத்தார் சங்கம், இளையபெருமாள்நல்லூர்

| | | |
|---|---|---|
| கு. கோவிந்தராசு பிள்ளை | கு.பாலசுப்ரமணியன் | சு. மணிகண்டன் |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

**மாநில சங்க பொறுப்பாளர்கள்**

| | |
|---|---|
| சபா. கல்யாணம் பிள்ளை | நா. பன்னீர்செல்வம் பிள்ளை |
| ஒன்றிய செயலாளர் | மண்டல செயலாளர் |

**கார்குல மகளிர் அணி**

| | | |
|---|---|---|
| சம்பூர்ணா இனியன் | சாந்தா வைத்தியலிங்கம், | லக்ஷ்மி பாலசுப்ரமணியன் |
| தலைவி | செயலாளர் | பொருளாளர் |

**மகளிர் குழு பொறுப்பாளர்கள்**

ஆனந்தவல்லி கார்குல மகளிர் குழு : பவளக்கொடி ராமையன், சித்ரா சீனிவாசன்

பிணிதீர்த்தம்மன் கார்குல மகளிர் குழு: ராஜலக்ஷ்மி முருகேசன், தமிழ்செல்வி சரவணன்

# ஆரலூர் B. ராமநாதன் & பூதனூர் G. செல்வநாயகம்

## இல்ல திருமண விழா





மணமக்கள்

**R. சோமசுந்தரம்** B.Tech., - **S. அனுஷ்யா** B.E.,

**30–04–2025** புதன்கிழமை மயிலாடுதுறை ஸ்ரீ விமலாம்பிகை திருமண மஹாலில் நடைபெற்ற திருமண விழாவிற்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்திய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

**M. ராமநாதன்-R. சாந்தி**
சென்னை
செல் : 99437 59457



**G. செல்வநாயகம்-S. சீதா**
மயிலாடுதுறை
செல் : 94428 49928

# சதாபிஷேக விழா



தஞ்சாவூர் மாவட்டம் சூரியனார்கோயில் திரு. **ச. கிருஷ்ணமூர்த்தி** (தலைமை ஆசிரியர் ஓய்வு) திருமதி. **தங்கம் கிருஷ்ணமூர்த்தி** இவர்களின் சதாபிஷேக விழா **31–03–2025** அன்று வைதீஸ்வரன் கோயில் சதாபிஷேக ஹோட்டல் வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**நன்றி நன்றி நன்றி.**

பேரன், பேத்திகள்

**க. நந்தகுமார்,** ME.,

**பா. அமிர்த பிரியதர்ஷினி,** B.Com., CA

**பா. சஹானா**



அன்புடன்

**நா. கணேஷ்**

**ஜெயந்தி கணேஷ்**

**வே. பாலமுருகன்**

**வசந்தி பாலமுருகன்**

(பாலா பில்டர்ஸ்)

Cell : 9442452721
8870311778

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
1-1-1928

மறைவு:
23-04-2025

கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் தாலுக்கா, நந்தீஸ்வரமங்கலம்
தெய்வத்திரு. B. ரெங்கசாமி பிள்ளை அவர்களின் மனைவியாகிய

திருமதி. **R. ஞானஜோதி அம்மாள்** அவர்கள்

**23–4–2025** அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அன்பான பேச்சு பண்பான குணம்**
**பாசமுடன் அரவணைக்கும் உயர்ந்த உள்ளம்**
**கொண்டவரே! தாங்கள் இம்மண்ணுலகில் இருந்து**
**மறைந்தாலும் தங்கள் நினைவுகள் என்றும்**
**எங்கள் இதயங்களில் இருந்து மறைவதில்லை.**

என்றும் உங்கள் நினைவில்

திரு. **R. பாலு**
திருமதி. **B. விமலா**

திரு. **B. வெங்கடேசன்**
திருமதி. **S. சுஜிதா**

மற்றும்

**B.V. ரோகித் கண்ணா**

## ஜன நாயகத்தின் தூண்கள்

## PILLARS OF DEMOCRACY

மக்களால் மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியையே மக்களாட்சி அல்லது ஜன நாயகம் என்று சொல்லுகிறோம் அந்த டெமாக்ரசி என்னும் ஜன நாயகத்தைத் தாங்கும் தூண்கள் என மூன்று அம்சங்களைக் குறிப்பிடுவார்கள் அவையே நாடாளும் மன்றம் / சட்ட மன்றம் LEGISLATURE நிர்வாகம் EXECUTIVE மற்றும் நீதித்துறை JUDICIARY என்பவைகளாகும் ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி மகன் மருமகள் என ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பொறுப்புகளும் அதிகாரங்களும் இருப்பது போல் ஒரு ஜன நாயக நாட்டின் முக்கிய தூண்களான நாடாளு மன்றம் / சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித் துறை ஒவ்வொன்றுமே அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு செயல் படும் அத்தகைய ஜன நாயகத்தின் தூண்களைப் பற்றி சிறிது பார்ப்போம் இவற்றில் எது உயர்ந்தது அல்லது அதிகாரம் மிக்கது என்று பார்க்க இயலாது அவை அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு செயல் பட்டால்தான் ஜன நாயகம் நல்ல முறையில் இயங்கும்

### நாடாளும் / சட்ட மன்றம் LEGISLATURE

இந்த நாடாளும் / சட்ட மன்றம் தான் நாட்டிற்கான சட்டங்களை உருவாக்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றம் என்னும் இந்த அமைப்பு தாங்கள் உருவாக்கும் சட்டத்தைத் தங்கள் அமைப்புக்குள்ளேயே விரிவாக விவாதித்த பின்னரே அவ்வாறு சட்டமாக உருவாக்கும் அத்தகைய சட்டங்களுக்கான விதிகள் உருவாக்கும் அதிகாரத்தை எக்சிக்யூடிவ் என்னும் நிர்வாகிகளுக்கு அந்த சட்டமன்றம் அளிக்கும்

### நிர்வாகம் EXECUTIVE

இந்தியாவில் இந்த நிர்வாகம் என்பது சட்டமன்றத்தின் அதிக அதிகாரத்தால் நியமிக் கப்படுவதால் இது ஒரு நியமிக்கப்பட்ட அமைப்பு அல்லது மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு ஆகும் இந்த நிர்வாகமே நாடாளும் மன்றம் / சட்ட மன்றம் இயற்றிய சட்டத்துக்குப் பொறுப்பும் அதனை அமுல் படுத்துவதும் ஆகும் அவ்வாறு சட்டங் களை திறம்பட அமுல் படுத்த இந்த நிர்வாகமே கொள்கைகளை வகுக்கும்

### நீதித் துறை JUDITIARY

தேர்ந்தெடுக்கப்படாமல், நியமிக்கப்பட்ட இந்த அமைப்பே சட்டப்படி பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய ஒன்றாகும். அத்துடன் அரசின் இதர பிரிவுகளில் இந்திய அரசியல் சாஸனம் பாதுகாப்பாக இருக்கத் தக்க வகையில் அரசியல் சட்டத்துக்கான விளக்கங்களை அளிக்கும் ஒரு சட்டத்தின் பகுதி அரசியல் சட்டம் அளித்துள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிராக இருந்தால் அந்த சட்டம் அரசியல் சாஸனத்துக்கும் எதிரானது என்று அறிவித்து அதனைத் தடை செய்யவும் அவ்வாறு சட்டத்தை மீறுவதைத் தண்டிக்கவும் நீதித் துறைக்கு அதிகாரம் உள்ளது

அதிகாரத்தைப் பிரிப்பது பற்றிய உட்பொருட்கள் அதிகாரத்தைப் பிரிப்பது பற்றிய கோட்பாடு நம்முடைய அரசியல் சாஸனம் முழுமையிலும் உள்ளது. ஆனால் அதே நேரத்தில் அரசியல் சட்டத்தின் ஒரு இடத்திலும் கூட அது வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை அரசின் பல அங்கங்களான் பல துறைகளிடையே தங்களது அதிகாரங்களை / செயல் பாடுகளைப் பிரித்துக் கொள்வதிலியே அரசின் அடிப்படைக் கோட்பாடு விளங்குகிறது அதிகாரங் களைப் பகர்ந்து கொள்ளும் கோட்பாடு என்றால் அதற்கு அரசின் மூன்று வெவ்வேறு நிறுவனங்கள் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. மாறாக அரசின் வெவ் வேறு துறைகளிடையே ஒருங்கிணைப்பு அவசியமே ஒழிய மூன்று வெவ்வேறு நிறுவனங்கள் தேவை இல்லை.

### ஒருங்கிணைப்பு

எக்சிக்யூடிவ் என்னும் நிர்வாகத்துறை தான் நாடாளுமன்றம்சட்டம்இயற்றமுன்மொழியும்நாடாளும் மன்றத்தில் அது சட்டமாக நிறை வேற்றப்பட்டு விட்டு அந்த மசோதாவுக்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்து விட்டாரானால் அது சட்டமாக நிறை வேறி விடும். பிறகு அந்த சட்டம் நீதித் துறை / நீதி மன்றங்களால் உறுதி செய்யப்பட்டு விடும்.

நாடாளுமன்றம், நிர்வாகம், மற்றும் நீதித் துறை ஆகிய மூன்று நிறுவனங்கள் / அமைப்புகளையும் முற்றிலுமாகப் பிரிப்பது என்பது சட்ட மற்றும் அரசியல் சாஸனப் பிரச்சினைகளில் விடக் கூடும் அதிகாரங்களைப் பிரிப்பதற்கு பதிலாக அந்த கோட் பாட்டை அரசின் முக்கிய பணிகளை ஒரு சில துறைகளில் பிரித்துக் கொடுப்பதுடன் ஒரு துறையினர் மற்றொரு துறையின் பணியில் தலையிடாமல் இருப்பதையும் அப்போதைக் கப்போது சோதித்துக் கொள்ள வேண்டும்

### நாடாளும் மன்றத்தில் உள் அடக்கம்

இந்திய நாடாளும் மன்றம் என்பது , இந்தியக் குடியரசுத் தலைவர், லோக் சபை என்னும் மக்களவை மற்றும் ராஜ்ய சபை என்னும் மாநிலங்களவை ஆகிய மூன்றினையும் உள்ளடக்கியதாகும். நாடாளும் மன்றத்தின் சுமுகமான செயல்பாட்டில், நிர்வாகத்தை மேற்பார்வை இடுதல். பட்ஜெட் என்னும் நிதி நிலை அறிக்கையை அரசின் ஆண்டு வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றுதல், பொது மக்களின் குறை களை வெளியிடுதல் , முன்னேற்றத் திட்டங்கள், உலக நாடுகளுடன் உறவு.மற்றும் தேசிய கொள்கைகள் போன்றவற்றை விவாதித்தல் ஆகியவைகளும் அடங்கும்

### சட்டம் நிறை வேற்றுதல்

அனைத்து சட்டங்களும் நாடாளும் மன்றத்தின் இரு அவைகளான மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகியவற்றின் ஒப்புதலைப் பெறவேண்டும் . நிதி சம்பந்தப்பட்ட மசோதாக்களில் லோக் சபை என்னும் மக்களவையின் ஒப்புதல் மிக முக்கியமாகும் . நமது இந்திய அரசியல் சாஸனத்துக்குத் திருத்தங்கள் கொண்டு வரும் அதிகாரமும் நமது நாடாளு மன்றத்துக்கு உள்ளது. இந்திய நாட்டின் மத்தியில் இந்திய அரசுக்கான நாடாளுமன்றம் உள்ளது போல் நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களும் சட்டமன்ற மேலவை கவுன்சில் மற்றும் சட்டமன்ற கீழவை அசெம்பிளி ஆகியன உள்ளன. ஆனால் சில மாநிலங்களில் தமிழ் நாட்டைப் போல கவுன்சில் என்னும் கீழவை கிடையாது

### நீதித் துறையின் சுதந்திரம்

அரசின் நிறுவனங்களுக்கிடையே எழும் பிரச்சினைகளையும் அரசுக்கும் பொது மக்களுக்கும் இடையே எழும் பிரச்சினைகளையும் பொது மக்களில் ஒருவொருக்கு ஒருவர் இடையே வரும் பிரச்சினைகளையும் நீதித்துறை தீர்த்து வைக்கும். இத்துறை நாடாளும் மன்றம் மற்றும் நிர்வாகம் இவற்றிலிருந்து வேறு பட்டு அவற்றுடன் சம்பந்தம் இல்லாமல் தனித்து இயங்கும் நிர்வாகத்தின் ஆட்சி முறையிலிருந்து பொது மக்களின் சுதந்திரத்தைக் காக்க இந்த நீதித்துறை தனித்து சுதந்திரமாகச் செயல் பட வேண்டியது அவசியமாகிறது

### ஜன நாயகத்தின் நான்காவது தூண்

முன்பெல்லாம் மேலே சொல்லப்பட்ட நாடாளும் மன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்றுமே ஜன நாயகத்தின் மூன்று தூண்கள் என சொல் லப்படுவது வழக்கம் சமீப காலங்களில் மீடியா எனப்படும் ஊடகங்கள் ஜன நாயகத்தின் நான்காவது தூண் என்று கூறப்படுகிறது ஜன நாயக நாட்டில் இந்த ஊடகங்களுக்கு மக்களிடையேயும் மற்றும் அரசின் பல் வேறு துறைகளி லிலும் இருக்கும் செல்வாக்கு காரணமாகவே அவை நான்காவது தூணாகக் கருதப்படுகின்றன உதாரணமாக அரசின் கொள்கை மாற்றங்கள் மற்றும் நிலுவையில் இருக்கும் மசோதாக்கள் பற்றி ஊடகங்களின் ஆதரவு அல்லது எதிர்ப்பு போன்றவைகள்தான் இந்திய அரசியல் சாஸனத்தில் ஃப்ரீடம் ஆஃப் ப்ரஸ் என்னும் ஊடகங்களுக்கு சுதந்திரத்தை அளிக்கும் எந்த ஒரு உறுதியும் இல்லை. ஆனால் சகல் பேபர்ஸுக்கும் இந்திய யுனியன் அரசுக்கும் இடையே நடந்த வழக்கில் உச்ச நீதி மன்றம் அரசியல் சட்டப் பிரிவு 19 1 a வை விளக்குகையில் அந்த பிரிவில் பத்திரிகை சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறது

### இந்தியாவில் அதிகாரத்தைப் பிரித்தல்

இந்திய அரசியல் சாஸனத்தைப் படிப்பவர்களுக்கு இந்திய அரசியல் சட்டம் இந்தியாவில் அதிகாரங்களைப் பிரித்துக் கொள்ளும் கொள்கையை ஏற்றுக் கொள்கிறது என்பது தெளிவாகப் புரியும், அதாவது இந்திய அரசியல் சட்டப்படி நிர்வாக அதிகாரங்கள் குடியரசுத் தலைவர் வசம் உள்ளன சட்டம் இயற்றும் அதிகாரங்கள் நாடாளும் மன்றம் வசமும் நீதித்துறை அதிகாரங்கள் உச்ச நீதி மன்றம் மற்றும் உயர் நீதி மன்றங்கள் வசமும் உள்ளன

### குடியரசுத் தலைவர்

குடியரசுத் தலைவர் ஒரு குறிப்பிட்ட காலம் வரை பதவி வகிப்பார் அவருடைய செயல்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் பற்றி அரசியல் சட்டத்திலேயே குறிப்பிடப் பட்டுள்ளது

### இந்திய நாடாளும் மன்றம்

இந்திய நாடாளும் மன்றம் அரசியல் சாஸனத்துக்கு உட்பட்டு எந்த விதமான சட்டங்களை இயற்றவும் அதிகாரம் உண்டு. அதனுடைய சட்டம் இயற்றும் அதிகாரத் திற்கு எந்த விதமான எல்லையும் கிடையாது நாடாளும் மன்றம் ஏற்கனவே உள்ள சட்டங்களை முன் தேதி இட்டோ அல்லது பின் தேதி இட்டோ திருத்தம் செய்யலாம் ஆனால் நாடாளும் மன்றம் தகுதி வாய்ந்த ஒரு நீதி மன்றம் அளித்த தீர்ப்பினை செல்லாதது ஆக்கவோ அல்லது அத் தீர்ப்பினை செயல்படுத்தாமல் இருக்கவோ செய்யக் கூடாது.

தொடரும் ....

## ஜப்பானில் நான்....

திருமதி. கலா ஞானசம்பந்தன்

13–5–2025 அன்று அதிகாலை ஜப்பானுக்கு சேலம் Grand Royal Tours மூலம் செல்லும் 30 பேரும் சென்னை விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர் கிளம்பினோம். மறுநாள் 14–ஆம் தேதி ஜப்பானின் தலைநகர் டோக்கியோவின் நரீடா விமான நிலையத்தில் எங்கள் பாதம் பதித்தோம். இறங்கி நேரே Meiji Shrine என்ற இடத்தில் உள்ள புத்தர் கோயிலுக்குச் சென்றோம். ஜப்பானியர்கள் உருவ வழிபாடு செய்வதில்லை; இயற்கையைத் தான் கடவுளாக வழிபடுகிறார்கள். அவ்விடத்திற்கு செல்லும் வழி முழுதும் பசுமை; பசுமைதான். கோயிலில் இரு கைகளையும் தட்டி, தலையைக் நன்கு குனிந்து நமஸ்கரிப்பதுடன், அவர்கள் வேண்டுதலை ஒரு அட்டையில் எழுதி தொங்க விடுகிறார்கள். ஒவ்வொரு நாட்டிலும் வழிபாட்டு முறை வேறுபடலாம்; ஆனால் எண்ணங்கள் ஒன்றாகத்தான் இருக்கிறது.

டோக்கியோவில் அடுத்து நாங்கள் சென்றது Shibu ya crossing. அந்த இடத்தின் Hachi Ka Statue தான் மிகவும் சிறப்பானது. ஹட்சிகா என்ற பெயர் கொண்ட ஒரு நாயின் சிலைதான் அது. இந்த Crossing-ல் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் சாலையைக் கடக்கிறார்கள். அப்படி செல்லும் போது, ஒரு நாயுடன் வரும் ஆபிசர் இறந்து விட, அவர் இறந்தது தெரியாமல், அந்நாய் 9 வருடங்கள் அவ்விடத்திலேயே காத்திருந்து உயிர் துறந்ததாம். அதனால் அந்த சந்திப்பில் அதற்கு ஒரு சிலை வைத்து ஒரு வரலாறு படைத்து சுற்றுலாப் பயணிகள் காண வழி செய்துள்ளார்கள்.

அடுத்து 15–ஆம் தேதி அன்று, அந்நாட்டின் Imperial Palace உள்ள இடத்திற்குச் சென்றோம். ஜப்பானிய மன்னர் வாழும் அந்த அரண்மனையைத் தூரத்தில் இருந்து தான் பார்க்க இயலும். இங்கு ஊர் நடுவே தெளிவான நதிகள் ஓடுகின்றன (கேரளாவைப் போல) அதனால்தானோ, என்னவோ இந்த ஊர் பசுமைக் கோலம் பூண்டுள்ளது. அடுத்து மிகவும் பிரசித்தி பெற்ற Rainbow பாலத்தின் வழியே 'லிபர்ட்டி' சிலை இருக்குமிடத்திற்குச் சென்றோம். இப்பாலம் ஊர் நடுவே ஓடும் ஆற்றின் மேல் கட்டப்பட்டுள்ளது. பாலத்தின் கீழ் தளத்தில் உள்ளூர் செல்லும் வண்டிகள் செல்லும். அடுத்து மத்தியில் ரயில் செல்லும் பாதை; மேலே Highway Road, இப்படி அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜப்பானியர்களின் சாதனை சாலையை ரசித்து, பயணக் களைப்பே தெரியாமல் லிபர்ட்டி சிலையைக் காணச் சென்றோம்.

இந்த சுதந்திரதேவி சிலையை பிரான்ஸ்க்கு அமெரிக்கா கொடுக்க, அதை பிரான்ஸ் ஜப்பானுக்கு அன்பளிப்பாக கொடுத்ததாம். சிற்பி ஃபிரடரிக் அக்ஸ்டே பார்தோஷ் வடிவமைத்த இச்சிலை 151 அடி உயரமும், 154 அடி உயரமும் உள்ள ஒரு பீடத்தில் பிரம்மாண்டமாக நிற்கிறது. இதனால் ஜப்பானுக்கும், பிரான்ஸுக்கும் இருக்கும் நட்பு நீடிக்கிறது; வலுவாக உள்ளது என்றனர். அடுத்து நாங்கள் சென்றது "அசகுசா" என்ற புத்தர் கோயில், அசாகுசா என்ற இடத்தில் சுமேதா ஆற்றில் மீனவர்களால் கண்டெடுக்கப்பட்ட ஒரு தங்க புத்தர் சிலையை, அந்நாட்டு மன்னரும், மக்களும் அவ்விடத்திலேயே பிரதிஷ்டை செய்து புத்தர் கோவிலை எழுப்பியதாக வரலாறு கூறுகிறது. அக்கோயிலின் முன் 'தீகுண்டம்; புகைந்து கொண்டே உள்ளது.

அடுத்து நாங்கள் சென்றது 3D Team Lab Toyosu என்ற ஒரு show பல படிகள்; 1) இருட்டு அறை; அருவி போல் நீர் கொட்டி ஓடும் நீரில் நடந்தோம்.

2) அதே இருட்டில் 3 அடி நீரில் வண்ண ஒளி படும்படி அமைத்து இருந்ததில் நடந்தது வினோத அனுபவம். (அக்காலத்தில் கிராமங்களில் வாய்க்கால் வழியே நடந்து செல்வது நினைவுக்கு வந்தது)

3)அடுத்து : ஒரு கண்ணாடி அறையில் கண்ணாடி மணிகளைச் சரம்சரமாக தொங்கவிட்டு, கலர் லைட் போட்டு 3D எஃபெக்ட் கொடுக்க, ஏதோ சொர்க்கத்தில் நடப்பது போன்றும், இந்திர லோகத்தில் இருப்பது போன்றும் ஓர் பயம் கலந்த உணர்வு தோன்றியது எனில் அது மிகையன்று.

4) அடுத்த அறையில் பெரிய, பெரிய ரப்பர் பந்துகள்; பெரிய பலூன்கள் போல சுத்தி, சுத்தி வந்து நடக்கும் நம் மீது வந்து மோதுகிறது. ஒரு திரில்லிங்கான அனுபவம்.

5)அடுத்த அறையில் நிறைய ஸ்பான்ச் மெத்தைகளை மேடும் பள்ளமுமாக போட்டிருந்ததில், எந்த பிடிமானமும் இன்றி, தத்தக்கா, பித்தக்கா என்று நடந்து சென்றதும், கீழே விழுந்து, விழுந்து எழுந்து சென்றதும் மிகவும் சிரிப்பாக இருந்தது.

6)ஒரு கண்ணாடி அறை முழுவதும் பல நிறங்களான மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு பூங்கா போன்று அலங்கரித்திருக்க, கண்ணாடியில் இப்பூக்களைக் கண்டு ரசித்தோம்.

– பயணம் தொடரும்.



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: 94437 00375

Email: thiagu1943@gmail.com

மனிதன் தவிர மற்ற விலங்குகள் சூழ்நிலைக்குத் தக்கவாறு அனுசரித்துப் போகின்றன. மனிதன் மட்டும்தான் இயற்கையைக்கூட தனக்குச் தேவையானபடி மாற்றிச் சீரழிக்கின்றான்.

## மேதைகளின் வாழ்வில் சில சுவையான சம்பவங்கள்

### காந்திஜி



சபர்மதி நதியில் வழக்கமாகக் குளிக்கச் செல்லும் ஆசிரமத்தொண்டர்கள் குளிர் காரணமாக குளிக்கச் செல்லவில்லை.அவர்கள் குளிக்கச் செல்லாததை அறிந்த காந்திஜி ஆண்டவன் நமக்காக நதியின் நீரைக் கொடுத்திருக்கிறார்,நடந்துபோய் குளிக்க,கை,கால்களைக் கொடுத்திருக்கிறார் அப்படியிருந்தும் குளிக்கச்செல்லாமல் ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? என்றார்.அதைக்கேட்ட ஆசிரமத்தொண்டர் ஒருவரின்மகன் பாபுஜி ! கடவுள் கூடவே குளிரையும் கொடுத்திருக்கிறாரே! என்றார். உடனே அனைவரும் சிரித்தனர் .காந்திஜியும் ரசித்து சிரித்தார்.

### ஹிட்லர்



மனநல ஆஸ்பத்திரியைப் பார்வையிடுவதற்காக ஹிட்லர் சென்றார்.அங்குள்ள மனநோயாளிகளுக்கு ஹிட்லர் வரும் போது ஹிட்லர் வாழ்க என்று கூறும்படி முன்பே கூறியிருந்தனர்.அதுபோலவேஹிட்லரைக்கண்டதும்ஹிட்லர்வாழ்க!எனகோஷமிட்டனர். ஹிட்லருக்கு ஏக சந்தோஷம்.ஆனால் ஒருவர்மட்டும் கோஷம்போடாமல் அமைதியாக நின்றுகொண்டிருந்தார்.அதைக்கண்ட ஹிட்லர் கோபமாக வாழ்க என்று கூறாமல் ஏன் மவுனமாக நிற்கிறாய் ? என்று கத்தினார்.உடனே அவர் நான் பைத்தியமில்லை...டாக்டர் என்றார் அமைதியாக

### பெர்னாட்ஷா



பெர்னாட்ஷாவின் நண்பர் ஒருவர் அவரை எடக்கு மடக்காக இப்படிக் கேட்டார்உங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாக வைத்துக் கொள்வோம் அப்போதுநீங்கள் என்ன செய்வீர்கள்? பெர்னாட்ஷா உடனே கடவுளுக்கு நன்றி சொல்வேன் என்றார்.இந்த பதிலை சற்றும் எதிர்பாராத இவரது நண்பர் சற்று குழப்பத்துடன் கடவுளுக்கு நன்றியா?ஏன்? எனக் கேட்டார்.ஷாவும் விடவில்லை. சரியான பதிலைத் தந்தார் பைத்தியக்காரத்தனமாகக் கேள்வி கேட்கும் உங்களைப் போன்றவர்கள் என்னை நெருங்கமாட்டார்கள் அல்லவா?கேள்வி கேட்டவர் முகத்தில் அசடுவழிந்தது. பெர்னாட்ஷா மீது கொண்டிருந்த அன்பு காரணமாக சுரங்கத் தொழிலாளர்கள் ஒரு கூட்டத்திற்கு அழைத்திருந்தனர். .அவர் பேசுவது எப்போதும் வேடிக்கையாகவும் பொருள்படவும் இருக்கும்.ஷாவினை பேசுமாறு அழைத்தார்கள்.ஷா எழுந்தார்.மக்களின் கவனமும் பார்வையும் அவர் பக்கமே திரும்பின.ஷா சொன்னார்:சுரங்கத்தொழிலாளர்களுக்கு நான் அதிகம் சொல்லவிரும்பவில்லை.ஒன்றே ஒன்றுதான் கூறப்போகிறேன்.அதை மட்டும் அவர்கள் நினைவிற்கொண்டு நடந்தால் போதும்.

அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் நீங்கள் மீண்டும் மீண்டும் கீழே போகாதீர்கள்.மேலே ஏறி வாருங்கள் என்பதுதான்.கூட்டமெங்கும் கொல் என்ற சிரிப்புதான்.



**உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து..**




எண்ணக்கூடியது எதுவாயினும் அது உயர்வைப் பற்றியே இருக்க வேண்டும்.ஒருவேளை உயர்ந்த எண்ணம் கை கூடாவிட்டாலும் அத்தகைய எண்ணங்களை எண்ணுவதை மட்டும் விட்டுவிடக்கூடாது.

## சிரிப்பதற்கு சில நிகழ்வுகள்சாவைக்கண்டு பயமே இல்லை



ஒருநாள் முல்லா தன் நண்பரோடு பேசிக்கொண்டே நடந்து கொண்டிருந்தார். சுவாரசியமான பேச்சின் நடுவே இறப்பு பற்றி விவாதம் வந்தது. அப்போது முல்லா மிக தைரியத்துடன் நான் சாவு கண்டு பயப்படமாட்டேன் என்று கூறிக்கொண்டே வந்தார். அந்த நேரம் பார்த்து ஒரு முரட்டுக்காளை இவர்களை நோக்கி ஓடிவந்தது.இதைப்பார்த்த முல்லா வேகமாக ஓட ஆரம்பித்தார்.

பக்கத்திலிருந்த நண்பர், என்ன முல்லா சாவைக்கண்டு பயமே இல்லை யென்றீர்கள்,இப்போது காளையைக்கண்டு ஓடுகிறீர்கள்? என்றார். அதற்கு முல்லா நான் சாவைக்கண்டுதான் பயமில்லையென்றேன்.அந்தக் காளை உயிரோடு அல்லவா இருக்கிறது என்றார்.

## நான் ஒரு கனவு கண்டேன்!

இரண்டாவது உலகப்போர் நடந்துகொண்டிருந்தபோது நேச நாட்டுத்தலைவர்கள் ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் இம்மூவரும் முக்கிய விஷயங்கள்பற்றி ஆலோசிப்பதற்காக யால்டாவில் கூடியிருந்தார்கள். அன்று காலை உணவு உட்கொள்ளும்போது சர்ச்சில் பெரிய சுருட்டு ஒன்றை பற்றவைத்துக்கொண்டு ரூஸ்வெல்ட்டும் ஸ்டாலினும் இருக்குமிடம் வந்துசேர்ந்தார் . தெரியுமா உங்களுக்கு ? இரவு நான் ஒரு கனவு கண்டேன்.அதில் கடவுள் தோன்றி ,உன்னை உலகின் பிரதம மந்திரியாக்கிவிடுகிறேன் என்று வாக்களித்தார் என்றார்.

சர்ச்சில் கூறியதைக் கேட்டதும், பார்த்தீர்களா ,மறந்தே போய்விட்டேன்.இரவு நானும் ஒரு கனவு கண்டேன் அதில் தோன்றிய கடவுள் என்னைப் பார்த்து ,உன்னை உலக ஜனாதிபதி ஆக்கி விடுகிறேன் என்று வாக்களித்தார், என்றார் ரூஸ்வெல்ட்.

இருவரும் அமைதியாக உட்கார்ந்துகொண்டிருந்த ஸ்டாலினைப் பார்த்தார்கள்.அவர் தம் வாயிலிருந்த பைப்பை எடுத்துக்கொண்டே நேற்றிரவு உங்களிருவருக்கும் அப்படியொரு வாக்கு அளித்ததாகவே நினைவில்லையே என்று கூறி சுருக்கமாக முடித்துக்கொண்டார்.

## ஒன்று நடக்கும்,ஒன்று நடக்காது

அண்ணாமலை ரெட்டியாரிடம் ஒருநாள் ஓர் ஏழை விவசாயி வந்து ,அய்யா மன்னரிடம் சொல்லி எனக்கு ஓர் ஆடும்,ஒருமூட்டை அரிசியும் வாங்கித்தாருங்கள் !எனக்கேட்டுக் கொண்டார்.

இதைக்கேட்ட ரெட்டியார் நீங்கள் கேட்டதில் ஒன்று நடக்கும்,ஒன்று நடக்காது என்றார்.உடனே அந்த ஏழை விவசாயியின் முகம் வாடியது.இதைக்கண்டு சிரித்துக்கொண்டே ரெட்டியார் சொன்னார்,அய்யா ,கவலைப்படாதீர்கள்,நீங்கள் கேட்டவை கிடைக்கும்.அதில் ஆடு நடக்கும்,அரிசி மூட்டை நடக்காது,இதைத்தான் இப்படிச்சொன்னேன் என்றதும் இதைக்கேட்ட விவசாயி ரெட்டியாரின் குறும்பை ரசித்து சிரித்தார்.

## விடுகதைகள்



1.கனத்தப்பெட்டி, திறந்தால் மூட முடியாது.அது என்ன ?

2.கால் நான்கு ,நடக்காது.கண் ஆயிரம் பார்க்காது.அது என்ன ?

3.கை பட்டதும் சிணுங்குவான்.கதவு திறந்தால் அடங்குவான்.அவன்யார் ?

4.அடிபட்டவன் அழுதால் ஆனந்த ராகம்.அது என்ன ?

5.ஊர் முழுக்க ஒரே பந்தல் .அது என்ன ?

6.ஒத்தைக் கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை.அது என்ன ?

## சிரிக்கலாம் வாங்க

1. என்னசார் இது ?1000 ரூபாய் புடவையை 2000 ரூபாய்ன்னு பில் போட சொல்றீங்க ?
   என் மனைவிக்கு புடவையைவிட ,அதோட விலைதான் முக்கியம்!
2. எங்கப்பா மாதிரி நானும் ஒரு கலெக்டர் ஆகணும்னு ஆசைப்பட்டேன்!
   அப்படின்னா ,உங்க அப்பா கலெக்டரா ?
   இல்லை ...அவரும் கலெக்டர் ஆகணும்னு ஆசைப்பட்டாராம்.
3. அந்த ஆளுக்குக் கடன் கொடுத்தா ,போட்டிருக்கிற செருப்புதான் தேயும்னு தெரிஞ்சும்,
   எந்த நம்பிக்கையில அவருக்குக் கடன் கொடுத்தீங்க ?
   நான் என்ன அவ்வளவு முட்டாளா ?கடன் கொடுக்கும்போதே ,செருப்போட விலையை
   கழிச்சுகிட்டுத் தானே கொடுத்தேன்!

## நினைவாற்றல்

மனப்பாடம் செய்வது என்பது மூளைக்குத் தரும் ஒருவகைப்பயிற்சி என்பது ஆய்வுவழிச் செய்தி. வினாடி வினா நிகழ்ச்சியில் கலந்துகொள்பவரும் விரைந்து வெளிப்படுத்தும்போதுதான் வெற்றிபெறுகின்றார். இக்கருத்தியையே வலியுறுத்தவந்த ஔவையார்

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்

வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்.... என்கின்றார்.

கிராமங்களில் கல்வியறிவில்லாத வயதான பெண்கள்கூட பால்கணக்கு, விவசாயக்கணக்கு ,வீட்டின் வரவுசெலவு கணக்கு இவற்றை மனக் கணக்காகவே வைத்திருந்தனர்.இவர்களுக்கு நினைவாற்றல் அவசியமாக இருந்தது. ஆனால் இக்காலத்தில் கால்குலேட்டர்,கணினி ஆகியன வந்துவிட்டன.

உருவுக்கு மிஞ்சின குருவும் இல்லை எனும் பழமொழியே இருக்கிறது.நாம் ஒன்றைப் படித்துக்கொண்டேஇருந்தால் அதுவும் நாம் படிப்பதே நம் காதில் விழும்படியாக சப்தம்போட்டு படித்தால் நிச்சயமாக அந்தப்பாடம் நமக்கு ஒருபோதும் மறக்காது.திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டியைச் சேர்ந்த இராமையா என்பவர் திருக்குறளை மனப்பாடம் செய்து 1330 குறளிலும் எந்த வினா கேட்டாலும் விடைகூறி உலக நாடுகளுக்கெல்லாம் பயணம் செய்தார்.கலைமாமணி விருதுபெற்றார்.

அஷ்டாவதானியாகத் திகழ்ந்தார்.பல நூல்கள் எழுதினார்.தற்போது அவரது மகன் கனகசுப்புரத்தினம் என்பவர். பதினாறு செயல்களை ஒரே நேரத்தில் செய்யக்கூடிய சோடச அவதானியாகத் திகழ்ந்து வருகிறார்.இராமையா அவர்களுக்கு நிவைாற்றல் வளர அவர் எடுத்துக்கொண்ட முயற்சியும் பயிற்சியும்தான்.கின்னஸ் சாதனை புரிந்த கணிதமேதை சகுந்தலா தேவி சமீபத்தில் கணினியோடு போட்டியிட்டு அதனினும் விரைவாகச்செயல்பட்டு வென்றுள்ளார்.

## அலெக்ஸாண்டர் வாழ்வில் ஒரு சம்பவம்

போர்முடித்து திரும்பும்போது ஒரு யோகியை இந்தியாவிலிருந்து அழைத்துவரும்படி மக்கள் கேட்டுக்கொண்டது அலெக்ஸாண்டருக்கு நினைவிற்கு வந்தது.எங்கும் தேடி, இறுதியாக காட்டில் ஒரு மரத்தடியில் யோகி ஒருவரைக் கண்டார்.அவரும் தியானத்தில் இருந்தபடியால் அலெக்ஸாண்டர் அவரை தொந்தரவு செய்யாது எதிரில் அமர்ந்திருந்தார்.யோகி கண்விழித்தார் அலெக்ஸாண்டரும் யோகியை வணங்கி தனது கிரேக்க நாட்டிற்கு வரும்படி அழைப்பு விடுத்ததோடு, அவர் விரும்பியதெல்லாம் தருவதாகவும்,தன் அரண்மனையில் ஒரு பகுதியை அவருக்கென தந்துவிடுவதாகவும்,பணியாட்கள் அவர் இடும் பணிக்காக வரிசையில் காத்திருப்பார்களென்றும் கூறினார்.யோகி புன்முறுவல் செய்தார்.எனக்குத் தேவை நீ கூறுவதுபோல ஏதுமே இல்லை.என் பணியை நான்தான் செய்து கொள்ளவேண்டும்.பணியாட்கள் தேவையில்லை. மேலும் எனக்கு கிரேக்கநாடு செல்ல ஆசையும் இல்லை என்றார்.கோபம் கொண்ட அலெக்ஸாண்டர் உறையிலிருந்த தனது வாளை உருவினார்.நான் யார் என நினைத்தாய் ? உலகையே வெல்லும் மாவீரன் அலெக்ஸாண்டர்.நான் நினைத்தால் இப்போதே உன்னை வெட்டி துண்டுகளாக ஆக்கிவிட முடியும் என்றார்.யோகி புன்முறுவலோடு கூறினார்.நீ இரு செய்திகளைக் குறிப்பிட்டாய்.முதலாவது என்னை துண்டுகளாக்கி விடுவேன் என்று.நீ எனது போர்வையாக இருக்கும் உடலைத்தான் துண்டாக்க முடியும். நான் நிரந்தரமானவன். இறப்பற்றவன். இரண்டாவதாகக் கூறியது நீ உலகையே வெல்பவனென்று.ஆனால் உண்மையில் நீ எனது அடிமையின் அடிமை என்றார் யோகி புன்முறுவலோடு .சற்று நிதானித்த அலெக்ஸாண்டர் யோகியிடம் நீங்கள் கூறியது எனக்குப் புரியவில்லையே என்றார்.யோகி விளக்கமளித்தார்.எனது அடிமையாக நான் கருதுவது கோபம்.நீ இக் கோபத்திற்கு அடிமையாகி விட்டாய் என்பதைத்தான் நான் கூறினேன் என்றார்.கோபம் தணிந்த மாவீரன் யோகியின் காலில் விழுந்து வணங்கிச்சென்றார்.

## விடா முயற்சி:

தோல்வியை சந்திக்காதவர்கள் எதையுமே தொடங்காதவர்கள்.அவர்களுக்குத் தோல்வியே இல்லை. அதுபோல வெற்றியும் இல்லை.தோல்வியைச் சந்திக்கிறவர்கள் எதையோ தொடங்கி

இருக்கிறார்கள்.அதனால் முதலில் தோல்வி அவர்களுக்கு வந்திருக்கலாம்.தொடர்ந்து செய்தால்விடாமல் முயற்சி செய்தால் தோல்வியே தோற்றுப் போகும். வெற்றி என்கிற பலன் கிடைத்தே தீரும். சாதனை என்பது ஓர் அதிசயம் அல்ல. விடாமுயற்சியின்விளைச்சல்தான் என்றே புலப்படுகிறது.

பராக் ஒபாமா

## அறிவியல் செய்திகள்!

சு. தர்மராஜ்,

### 1. உயரத்திலிருந்து விழும் நீர், வெண்மையாகத் தெரிவது ஏன்?

நீர் அதிவேகத்துடன் உயரத்திலிருந்து விழும்போது பாறைகள்மீது பட்டு, நீர்த்துளிகள் அதனைச்சுற்றி அதிக அளவில் தெரிக்கின்றன. இந்த நீர்த்துளிகள் மனிதக் கண்களால் காணக்கூடிய ஒளியின் அலைநீளத்தைக் காட்டிலும் 100 முதல் 1000 மடங்கு பெரியவை.சூரியனிலிருந்து வெளிப்படும்,மனிதனால் காணக்கூடிய ஒளியில் சிவப்பு,நீலம்,மற்றும் பச்சை ஆகிய நிறங்கள் கலந்துள்ளன.இந்த ஒளிக்கதிர்கள் நீர்த்துளிகளில் பட்டு எல்லா திசைகளிலும் சமமாகச் சிதறுகின்றன.சிவப்பு,நீலம் மற்றும் பச்சை நிறங்கள் சமவிகிதத்தில் கலந்தால்.வெள்ளை நிறம் உண்டாகும்.ஆகவே ,நீர் ஒளிச்சிதறல் காரணமாக வெண்மையாகத் தோன்றுகிறது.நீர் குறைவான வேகத்தில் விழுந்தால் ,நீர்த்துளிகள் உண்டாகாது; நீர் வெள்ளை நிறமாகத் தோன்றாது.

### 2. வெப்ப ஆடி என்பது என்ன? (Thermo mirror):

ஜப்பானில் டோக்கியோவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஆடியின் மூலம் ஒருவரின் பரப்பு வெப்பநிலையைக் கண்டறிய முடியும்.இதில் ,அகச்சிவப்பு உணரி (infrared sensor) பொருத்தப்பட்டுள்ளது. இது ,நமது வெப்பநிலை அதிகரிக்கும்போது எச்சரிக்கை செய்யும்.

## இவர்கள் சொன்னார்கள்!

1. நான் தோற்கவில்லை.சரியாக ஒன்றைச் செய்வதற்குச் சரியில்லாத 10 ஆயிரம் வழி முறைகளைக் கற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. — தாமஸ் ஆல்வா எடிசன்.
2. உற்சாகத்தை இழக்காமல் நம்பிக்கையுடன் ஒரு தோல்வியிலிருந்து இன்னொரு தோல்விக்குப் பயணிப்பதே வெற்றியாகும். — வின்ஸ்டன் சர்ச்சில்
3. எதையுமேசெய்யாமல்இருக்கும் வாழ்க்கையைவிட ,தவறே செய்கிற வாழ்க்கைகூட கண்ணியமானதுதான். ஒருவகையில் அது பயனுள்ளதுமாகும். — ஜார்ஜ் பெர்னாட்ஷா
4. கடமைகளைச் சரியாகச் செய்யாமல், உரிமைகளுக்காக போராடக்கூடாது. உள்ளத் தூய்மையுடன் கடமைகளைச்செய்கின்றவனே பொதுநலத்தொண்டன்.

   முள்நிறைந்த செடியில்தான் எழில் நிறைந்த ரோஜாப் பூ மலர்கிறது.அதுபோல எதிர்ப்புகளுக்கும் , தொல்லைகளுக்கும் மத்தியில்தான் உண்மை மலர்கிறது. — மகாத்மா காந்தி

## பணம் தலைக்கு மேல் ஏறாமல் பார்த்துக் கொள்ளுங்கள்

1. சூழ்நிலைகளை சிலர் உருவாக்குகிறார்கள்.சிலர் தேவையான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்கிறார்கள்.உங்களுக்கான சூழ்நிலைகளை நீங்களே உருவாக்கிக் கொள்வதில்தான் மனிதனின் முழு ஆற்றலும் உள்ளது.
2. இறந்தவர்களைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை.இறந்தவர்களை இறந்தவர்களிடம் விட்டுவிடுங்கள். உங்கள் வேலை உயிரோடு இருப்பவர்களுடன்தான்.உயிரோடு இருப்பவர்களுடன் உங்களைச்சுற்றியுள்ள உயிர்களிடம் ஈடுபாடு கொள்ளுங்கள்.
3. நீங்கள் உறவுகளைத் தேடுவது நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதால்தான்.

   ஆனந்தமாக இருக்க ஆசைப்படுவதால்தான் அடுத்தவரை உங்களது மகிழ்ச்சிக்கு மூலமாக உபயோகப்படுத்த முயற்சி செய்வது.நமது மகிழ்ச்சி நமது கையில் இல்லை என்பதையே காட்டுகிறது.
4. உங்கள் உறவுகளை கவனத்துடன் ,பொறுப்புடன் முழுமையான அன்புடன் இங்கே உருவாக்கிக் கொள்ளுங்கள்.சொர்க்கத்தை இங்கேயே அனுபவிக்கலாம்.
5. அதிக செல்வம் துன்பத்தைத் தராது.சட்டைப்பையில் நிறைய பணம் இருப்பது ஒரு விதத்தில் நல்லது. ஆனால் அந்தப்பணம் உங்களுடைய சட்டைப்பையில் தங்காமல் ,தலைக்கு மேல் ஏறும்போதுதான் துன்பம் வரும்.பணம் அப்படி தலைக்கு மேல் ஏறாமல் பார்த்துக் கொள்ளுங்கள் .ஏனெனில் அதனுடைய இடம் அதுவல்ல.

## விடுகதை விடைகள்

1. தேங்காய், 2. கட்டில், 3. காலிங் பெல்,
4.மேளம், 5.வானம், 6.மிளகாய்

## சங்கப் பலகை

**பங்கு பெறுவோர் :** வசுமதி, மீனா, தீபிகா, பிரியா, ஆண்டாள், மீரா, கௌரி, சித்ரா, கோமதி.

**இடம் :** வசுமதி இல்லம் ; ராஜா அண்ணாமலைபுரம், மமாலை 4 மணி அளவில் தோழிகள் வருகை புரிந்தனர்.

வசுமதி : வாங்க! வாங்க ! நீங்கள் இங்கு வந்தது ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு! எனக்கு கையும் ஓடலை; காலும் ஓடலைப்பா!

கோமதி : எல்லாரும் friends தானேப்பா! இதுக்கு ஏன் இவ்வளவு anxiety? நான் ஒங்கிட்ட இதை எதிர்பார்க்கலே.

கௌரி : பரவால்ல ! விடுப்பா! நாம் நமது கச்சேரியைத் தொடங்கலாம். ஆண்டாளக்கா உங்கள் turn தான். எதைப்பத்தி சொல்லப் போறீங்க ?

ஆண்டாள் : வைகாசியும் ஆனியும் திருமணத்திற்கு மிகவும் ஏற்ற மாதங்கள், நிறைய கல்யாணங்கள் நடக்கும் இன்னைக்கு கூட எத்தனை பேர் வருவீங்களோன்னு நினைச்சேன். எனக்குத் தெரிஞ்சு சிதம்பரத்தில் நடக்கும் ஆனித் திருமஞ்சனம் தான் இம்மாதத்தில் விசேஷம். ஆனி உத்திரம் அன்று மகா அபிஷேகம் நடராஜருக்கு நடக்கும். 10 நாளும் சிதம்பரத்தில் விசேஷம் தான்!

சித்ரா : ஆமாக்கா! தேர் கூட உண்டு இல்லையா ?

ஆண்டாள் : ஆமாம்! ஜுன் 23 ஆம் தேதி, திங்கட்கிழமை கொடி ஏற்றுகிறார்கள். அன்றிலிருந்து daily ஒரு வாகனம், கஜ வாகனம், தங்க கைலாச வாகனம் என பவனி வருவார். 30ஆம் தேதி இரவு பிச்சாண்டவராக ரதத்திலும், ஜுலை 1ஆம் தேதி தேரோட்டமும் வெகு விமரிசையாக நடக்கும். இப்பல்லாம் கூட்டம் ரொம்ப ஜாஸ்தியா இருக்கு!

மீரா : அடுத்த நாள் அபிஷேகம், அதிகாலை 3 மணிக்கே ஆரம்பமாகி விடுமல்லவா ?

ஆண்டாள் : ஆமாம், அபிஷேகம் முடிந்து உத்திர தரிசனம் சுமார் பகல் 2 மணிக்கு கிடைக்கும் அடுத்த நாள் இரவு முத்துப் பல்லக்குடன் திருவிழா முடிவு பெறும்.

மீரா : நடராஜருக்கு ஒரு வருஷத்துக்கு 6 அபிஷேகங்கள். சித்திரை, ஆவணி, புரட்டாசி, மாசி, அபிஷேகங்கள் கனகசபையிலும், ஆனி மற்றும் திருவாதிரை ராஜசபையிலும் நடைபெறும்.

வசுமதி : என்ன அருமையான ஒரு பதிலடி! ஆபரேஷன் சிந்தூர் 23 நிமிடங்களில் துல்லியமாக திட்டமிட்டு பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ஒன்பது பயங்கர வாத தளங்களை 24 ஏவுகணைகள் மூலம் தகர்த்தது நம் இந்திய ராணுவம். நாட்டு மக்கள் அனைவரும் பெருமை கொள்வதுடன், ராணுவத்தையும் பாராட்டுகிறோம்.

சித்ரா : ஜெய்ஷ் –இ – முகமது, லஷ்கர் – இ. தொய்பா போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்குச் சொந்தமான இடங்களையும் Pokன் தலைநகர் முசாபராபாத் என எல்லா இடங்களையும் குறி வைத்து தாக்கியுள்ளது நமது இந்திய ராணுவம். ஜெய்ஷ்–இ– முகமது எனும் தீவிரவாத அமைப்பின் தலைவர் மசூத் அசாரின் குடும்பத்தில் 10 பேர் கொல்லப்பட்டதாக கூறியுள்ளார்.

பிரியா : பதிலடி நடவடிக்கையை எடுத்தவர்கள் பெண்கள் என்பதே பெருமைக்குரியது. ஒருவர் சோபியா குரேஷி. மற்றவர் வியோமிகா சிங். சோபியா குரேஷி 'கார்ப்ஸ் ஆஃப் சிக்னல்ஸ்' பிரிவின் அதிகாரி. குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த இவர், 1999–ல் ராணுவத்தில் சேர்ந்தார். இவரது கணவரும் ஒரு ராணுவ அதிகாரியே. ஐ.நா. வின் அமைதிக் குழுவில் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். 2006–ல் காங்கோவில் அமைதியை நிலைநாட்ட அனுப்பப்பட்ட குழுவில் இடம் பெற்றவர். 2016–ல் 18 நாடுகள் பங்கேற்ற 'எக்சஸைஸ் ஃபோர்ஸ் 18' அணிவகுப்பு ஒத்திகையில் ராணுவத்தை வழி நடத்திய ஒரே பெண் அதிகாரி. மேலும் பன்னாட்டு ராணுவ பயிற்சியில் நம் ராணுவத்துக்குத் தலைமை தாங்கியவர் இவர்.

கௌரி : இவங்களை எல்லாம் நினைச்சாலே பெருமையா இருக்கு இல்லையா ?

தீபிகா : உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த பொறியியல் பட்டதாரி வியோமிகா சிங். வியோமிகா என்றால் 'வானத்தின் மகள்'' என பொருள். விமானப்படையில் 2019–ல் நிரந்தரமாக்கப்பட்டவர். சேடக், சீட்டா போன்ற விமானங்களை சிரமமான நிலப்பரப்பு கொண்ட இடங்களில் இயக்கும் திறமை கொண்டவர். ஹெலிகாப்டர் விமானியாக சேர்ந்து, விங்கமாண்டர் ஆக உயர்ந்தவர். வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இவர்கள் இருவரும் இணைந்து இந்த ஆபரேஷனைக் குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கினார்கள்.

மீரா : நானும் ஒரு பெண்ணின் சாதனையைக் கூறுகிறேன். இமாச்சல பிரதேசத்தைச் சேர்ந்த பார்வையற்ற மாற்றுத்திறனாளி பெண் சோன்ஜின் அங்மோ தனது 29– ஆம் வயதில் மே 19–ஆம் தேதி உலகின் உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் குழுவினருடன் ஏறி நம் தேசியக்

கொடியைப் பறக்க விட்டுள்ளார். அவர் தனது 8 ஆவது வயதில் பார்வையை இழந்தாலும், மிராண்டா ஹவுஸ் கல்லூரியில் முதுநிலை பட்டம் பெற்று, யூனியன் பேங்க் ஆப் இந்தியா வில் பணியாற்றுகிறார்.

ஆண்டாள் : நிஜமாகவே இந்த பெண்களை எல்லாம் பாராட்ட வார்த்தைகளே இல்லைப்பா ! இவைகளைக் கேட்கும் போது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

கௌரி : இன்னொன்றையும் சொல்லி விடுகிறேன். 77 வயதான கன்னட எழுத்தாளர் பானு முஷ்டாக் இவ்வருடத்தின் சர்வதேச புக்கர் பரிசை வென்றுள்ளார். இவர் எழுத்தாளர் மட்டுமன்றி வழக்கறிஞர், சமூக செயற்பாட்டாளர் என பன்முகத் தன்மை கொண்டவர். 'ஹசீனா மற்றும் அதர் ஸ்டோரிஸ்' என்று கன்னடத்தில் எழுதிய நூலை பத்திரிக்கையாளர் தீபா பாஸ்தி ஆங்கிலத்தில் 'Heart Lamp' என மொழி பெயர்த்து வெளியிட்டார். அதற்குத்தான் இலக்கிய உலகின் மிக உயரிய விருதான புக்கர் பரிசு கிடைத்துள்ளது. பெண்ணின் பெருமைக்கு இன்னுமோர் மகுடம்.

வசுமதி : பெண்களைப் பற்றி நிறைய பேசியாகிவிட்டது. 100% கல்வியறிவு பெற்ற முதல் மாநிலமானது மிசோராம். அனைவருக்கும் கல்வி வழங்கும் முயற்சி மத்திய, மாநில அரசுகளால் மேற்கொள்ளப்பட்டன. மாநில எழுத்தறிவு மையம் நிறுவியதுடன் புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டத்திற்கான சர்வேயர்களாக 'கிளஸ்டர்' வளமைய ஒருங்கிணைப்பாளர்கள், தன்னார்வ ஆசிரியர்கள் சேர்ந்து, மத்திய அரசின் 'உல்லாஸ்' எனப்படும் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் வாழ்நாள் முழுதும் கற்றலால் புரிந்து கொள்ளும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கோமதி : சென்னை பக்கிங்ஹாம் கால்வாய் ஓரத்தில் கழிப்பட்டுர் பகுதியில் 5 வகையான 12,500 அலையாத்தி கன்றுகள் நடப்பட்டுள்ளன.

சித்ரா : நம்மிடம் தற்சமயம் மரங்கள் வளர்க்க வேண்டும் என்ற உணர்வு வந்துள்ளது. நல்ல விஷயம் தான். கடந்த வாரம் இரு விஞ்ஞானிகள் இயற்கை எய்தி உள்ளனர். வான் இயற்பியல் விஞ்ஞானி ஜெயந்த் நார்லிகர். இந்திய வான் அறிவியல் துறையில் முக்கிய பங்காற்றியவர். Tata ஆராய்ச்சி நிறுவனத்தில் 1972 லிருந்து 89 வரை பணியாற்றிய போது வான் இயற்பியல் பிரிவு சர்வதேச அந்தஸ்தைப் பெற்றது. அவரது அறிவியல் படைப்புகளுக்காக 'கலிங்கா' விருது வழங்கப்பட்டது. நம் நாட்டில் மிக இளம் வயதில் அதாவது அவரது 26–ஆவது வயதில் பத்மபூஷண் விருது பெற்றவர். 2004–ல் பத்ம விபூஷண் விருதும் பெற்றுள்ளார். மராத்தியில் எழுதப்பட்ட இவருடைய சுயசரிதைப் புத்தகத்துக்கு 2014–ல் சாகித்ய அகாடமி விருது கிடைத்தது.

மீனா : மூத்த அணு விஞ்ஞானி எம்.ஆர். சீனிவாசன் அவர்களும் ஊட்டியில் இயற்கை எய்தினார். டாக்டர் ஹோமி பாபாவுடன் நாட்டின் முதல் அணு ஆராய்ச்சி உலையான ''அப்சரா' வின் கட்டுமானத்தில் இணைந்து பணியாற்றியவர். 1967–ல் சென்னை அணுமின் நிலைய தலைமைத் திட்ட பொறியாளராகவும், 1984–ல் அணுசக்தி துறை செயலராகவும் பணியாற்றிய இவர் 2015–ஆம் ஆண்டு பத்மவிபூஷண் விருது பெற்றார்.

மீரா : இரு விஞ்ஞானிகளின் ஆத்மாக்கள் சாந்தி அடைய பிரார்த்திப்போம். அடுத்த மாதம் எங்கு கூடுகிறோம் ?

மீனா : பாலாஜி நகரில் உள்ள எங்கள் வீட்டில் கூடலாம்.

வசுமதி : சுடச் சுட பஜ்ஜி, கேசரியுடன், காபியும் கொடுத்து உபசரிக்க, மகளிர் கூட்டம் கலைந்தது.

நன்றி ! வணக்கம் !

---

## எஸ். வெங்கடேசன் பிள்ளை எனும் இமயம்

கல்விக்கு கரம் கொடுக்கும் கருணைமிகு உள்ளமாம்,
கலைஞனாய் தொழில்துறையில் கனவுகளை
நிஜமாக்கிய ஜாம்பவான்
நமக்கு
வேலை வாய்ப்பை வாழ்வாக மாற்றிய ஒளியம்சம்,
வெற்றியின் வாசல் திறந்த வித்தகர் அவராம் !
படிப்பினைப் பறவையாக்கி பசுமை கனவை
வளர்த்தவர்,
பல்லாயிரம் இளைபவர் மனதில் நம்பிக்கையை
நட்டவர்.
CREW எனும் கோட்டையில், சாதனையின் கொடியை
ஏற்றியவர்,
சமுதாய சேவையில் என்றும், சிகரமாய் நின்றவர் !
கார்குலம் தழைத்தோங்க கடும் தவம்
செய்தவர் வாழ்க பல்லாண்டு
என வாழ்த்த வயதில்லை வணங்கி மகிழ்கிறேன்.

இவண் : M.A. ஜெயக்கீர்த்தி,
பெரம்பூர்.

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/6** செல்வி<br>**Dr. V. Priyadharshini**<br>Uthradam 4th Patham<br>Koodaluda<br>**பூர்வீகம் :** MA. Melvanniyur, Chidambaram<br>**விருப்பம் :** Middle / Upper Middle Class Caring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor. | Jan. 1995<br>5' - 2" | Internal Medicine M.D., | Sr. Resident Doctor at a Private Medical College, Chennai<br>Rs. 12-18 Lakhs/PA | திரு. J. Venugopalan,<br>B-703, Solitaire Appartments,<br>Mount Poonamallee High Road,<br>Porur, Chennai - 600 116<br>Cell : 99404 77263, 98949 28283<br>E-mail : venugopalan_ j@yahoo.com |
| **B 2/6** செல்வி **சு. இந்திரா**<br>சுவாதி<br>வங்காருடை<br>**பூர்வீகம் :** T. மானகசேரி (ஸ்ரீவில்லிபுத்தூர்) | **10.08.97**<br>168 cm | M.A.,<br>B.Ed., | ஆசிரியர்<br>(தனியார் பள்ளி) | திரு. மு. சுப்ரமணியன் @ நடராஜன்<br>12A, பெருமாள் சன்னதி தெரு,<br>திருநெல்வேலி – 627 006.<br>Cell : **93847 18554, 96293 10898, 96552 42760**<br>E-mail : nayaghy1989@gmail.com |
| **B 3/6** செல்வி **கு. ஸ்வேத்தா**<br>மூலம் – 3ம் பாதம்<br>வஞ்சனமுட<br>**பூர்வீகம் :** பட்டகட்டாங்குறிச்சி (நாகமங்கலம், அரியலூர் மாவட்டம்)<br>**விருப்பம் :** பட்டப்படிப்புடன் சென்னையில் பணிபுரியும் வரன். | **13.4.2001**<br>163 cm | BCA., MBA., | வால்மார்ட்<br>சென்னை<br>Rs. 4 Lakhs/PA | திரு. சா. குமரவடிவேல்,<br>பிளாட் நெ. 54, பாரதியார் தெரு,<br>இரண்டாம் கட்டளை,<br>சென்னை – 600 028.<br>Cell : **72998 60990, 98408 69075** |
| **B 4/6** செல்வி **G. Veenashree**<br>Bharani<br>Thanabaluda<br>**பூர்வீகம் :** Mayiladuthurai<br>**விருப்பம் :** Looking for post graduate professional well settled groom with good manners | 29.12.98<br>170 cm | Chartered Accountant<br>B.Com (Hons.) | Associate in PWC<br>Bengalure<br>Rs. 12-14 Lakhs/PA | திரு. S. Ganesan,<br>New No. 12, Old No. 882,<br>Ramasamy Salai,<br>K.K. Nagar West, Chennai - 600 078.<br>Cell : 95001 33229<br>E-mail : shobaganesh@yahoo.com |
| **B 5/6** செல்வி **புவனிஷா வெ.**<br>பூராடம் (4ம் பாதம்)<br>குருகுலராய<br>**பூர்வீகம் :** விருத்தாசலம்<br>**விருப்பம் :** நல்ல பணியில் உள்ள வரன் | **20.9.99**<br>168 cm | MCA | Preparing for Competitive Exams | திரு. வெங்கடேஷ் R.P.,<br>53/15, கடை வீதி,<br>விருத்தாசலம், கடலூர் மாவட்டம்<br>Cell : **83444 67058, 63823 32532, 99429 51318** |
| **B 6/6** செல்வி **M. ப்ரீத்தி**<br>பூராடம்<br>களப்பாள<br>**பூர்வீகம் :** செந்துறை | **06.8.98**<br>5' - 7" | M.Sc.,<br>B.Ed., (Phy.)<br>PGDCA | தனியார் பள்ளி ஆசிரியை | திரு. T. முருகேசன்,<br>சக்தி ஆட்டோமொபைல்ஸ்,<br>அரியலூர் மெயின் ரோடு,<br>செந்துறை (PO)<br>அரியலூர் (Dt.) – 621 714.<br>Cell : **98436 11082** |
| **B 7/6** செல்வி **E. வினோதினி**<br>மிருகசீரிடம்<br>சாத்துகுல<br>மன்னிப்பள்ளம் | **21.6.2001** | M.Com.,<br>B.Ed.,<br>UXUI | | திரு. N. இளங்கோ,<br>4/3, காமராஜர் நகர் விரிவாக்கம்,<br>தென்பாதி, சீர்காழி,<br>மயிலாடுதுறை மாவட்டம்.<br>Cell : **94891 86492, 90252 26911** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 8/6** செல்வி **ம. தனலட்சுமி**<br>உத்திரம் 4ம் பாதம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் | **7.5.98**<br>154 cm | B.Tech.<br>(CSE) | Software Engineer<br>Epsilon<br>Bangalore<br>Rs. 12,00,000/PA | திரு. க. மணிகண்டன்,<br>5/2, காளமேகம் தெரு,<br>கிழக்கு தாம்பரம்,<br>சென்னை – **600 059.**<br>Cell : **99416 20355, 79041 97546, 94447 11045** |
| **B 9/6** செல்வி **T. மீராஸ்ரீ**<br>பூரம்<br>கொன்னா | **26.02.94**<br>155 cm | B.Com.,<br>MBA., | Associate Client Processing,<br>Bank of Newyork<br>Chennai<br>Rs. 8 Lakhs/PA | திரு. V. தில்லைகோவிந்தராஜன்,<br>6/2, பச்சையப்பன் பள்ளி தெரு,<br>சிதம்பரம்<br>Cell: **94423 91183, 97874 78633**<br>E-mail : sundarithillai25@gmail.com |
| **B 10/6** செல்வி **S. Sivasangari**<br>Sadayam<br>Kothanuda<br>பூர்வீகம் : Kothatai | **20.9.2002** | B.Tech. (IT) | Associate Software Developer in Accenture<br>Chennai | திரு. T. Sivanesan,<br>No. 2, North Street, Srimushnam,<br>Cuddalure District - 608 703.<br>Cell : 76676 66897 |

## பயனுள்ள கோடை விடுமுறை

சென்ற இதழ் தொடர்ச்சி...

மாணவ, மாணவியருக்கு மரம் நடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கி, குறிப்பிட்ட பொது இடத்தில் அல்லது தெருவில் மரம் நட்டு அதைப் பராமரிக்கவும் ஏற்பாடு செய்யக் கற்றுத் தர வேண்டும்.

இதையெல்லாம் விட முக்கியமானது, விவசாய நாடான நம் நாட்டில் விவசாயிகள் பற்றிய விழிப்புணர்வும், மரம் நடுதலின் முக்கியத்துவம் குறித்து இளம் சிறார்களுக்கும் புரிய வைப்பதும், நம் சொந்த கிராமம், அல்லது தெரிந்தவர்களின் கிராமத்துக்குச் சென்று கிராமியச் சூழலில் தங்கி அந்த வாழ்வியலைச் சுவைக்க வேண்டும்.

விடுமுறையைப் பயனுள்ளதாகக் கழிக்க உறவுகளையும் அறிந்து கொள்ள வேண்டும். உறவுகளில் பெரும்பாலானவர்கள் கண்டிப்பாகக் கிராமங்களில் இருப்பார்கள். கிராமங்களுக்குச் சென்று அந்தச் சூழலை முழுமையாக உணர வைக்க வேண்டும். அவற்றின் மேம்பாட்டுக்கு இப்போது இல்லாவிட்டாலும், பின்னாளில் வாய்ப்பு வரும் போது உதவும் மனநிலை ஏற்படும்.

வீட்டு உறுப்பினர்களுக்கு வெளியே நீண்டிருக்கும் உறவின் முறைகளை அவற்றின் பெயர்களை அறிந்து கொள்ளலாம். சிறார்கள் தாத்தாவை அறிவார்கள். அந்தத் தாத்தாவின் தாத்தாவைப் பற்றி கிராமத்து முதியவர்களிடம் விசாரிக்கலாம். அங்கிருந்து தொடங்கி வாரிசுகள் பெயர் என ஒரு மர வரைபடமாக வரைய முயலுங்கள். ரத்த உறவுகள் அனைவரையும் இந்த வரைபடத்தின் பல்வேறு கிளைகளாக அடக்கலாம். உங்களது குடும்பத்தில் இந்த வரைபடம் ஒரு பொக்கிஷம் என்பதை பின்னாளில் உணர்வீர்கள்.

கிராமத்துப் பெரியவர்களிடம் கதை கேட்பது அலாதியான அனுபவமாக அமையும். செவி வழியாக அவர்கள் அறிந்த கற்பனைக் கதைகள் மட்டுமன்றி உண்மைத் தகவல்கள் நிறைந்த நிஜக் கதைகளும் உங்களுக்கு வியப்பை அள்ளித்தரும். நாட்டுப்புறப்பாடல் அறிந்தவர்கள் தெருவுக்கு ஓரிருவர் இருப்பார்கள். கதைகளிலும் பாடல்களிலும் ஏராளமான சொலவடைகள், விடுகதைகள், கர்ண பரம்பரைக் கதைகள், கதைகளுக்குள் பொதிந்திருக்கும் புதிய கதைகள் சுவாரசியங்கள் நிறைந்திருக்கும்.

ஒவ்வொரு விடுமுறைக்கும் குறைந்தபட்சம் 4 அல்லது 5 நாட்களாவது குடும்பத்துடன் சுற்றுலா செல்வதைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அப்போது தான் மனதுக்கு மகிழ்ச்சி கிடைத்து புத்துணர்வு ஏற்படும். சிறிதாவது ஓய்வெடுத்தது போலவும் இருக்கும். சென்று வந்த சுற்றுலா தொடர்பான பதிவுகள் மனதில் எப்போதும் அசை போடும் வாய்ப்பு உள்ளது. திட்டமிட்டுச் செயல்பட்டால், ஒவ்வொரு கோடையும் பயனுள்ளதாக மாறும்!

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
பெசன்ட் நகர், செல் : **9943702054**

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/6** செல்வன் **B. அருண்**<br>பூராடம்<br>களப்பாள<br>பூர்வீகம் : செந்துறை, அரியலூர் மாவட்டம்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | **12.07.95** | B.E (Mech) | HVAc Project,<br>Engineer<br>Bluestar Company<br>Chennai<br>Rs. 5 Lakhs/PA | திரு. A. பாலசுப்பிரமணியன்,<br>9/61, பிள்ளையார் கோவில் தெரு,<br>செங்காட்டுப்பட்டி (PO),<br>துறையூர் (Tk),<br>திருச்சி (Dt) **– 621 002.**<br>Cell : **97860 43774, 81110 57259** (W) |
| **G 2/6** செல்வன் **B. ஆனந்த்**<br>பூராடம்<br>களப்பாள<br>பூர்வீகம் : செந்துறை, அரியலூர் மாவட்டம்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | **12.07.95** | B.E (ECE) | Digital Command<br>Centre Executive<br>Johnson Controls<br>Bangaluru<br>Rs. 4,50,000/PA | திரு. A. பாலசுப்பிரமணியன்,<br>9/61, பிள்ளையார் கோவில் தெரு,<br>செங்காட்டுப்பட்டி (PO),<br>துறையூர் (Tk),<br>திருச்சி (Dt) **– 621 002.**<br>Cell : **97860 43774, 81110 57259** (W) |
| **G 3/6** செல்வன் **G. பிரவீன் பிரகாஷ்**<br>திருவாதிரை<br>குழுமுட<br>பூர்வீகம் : கூடலூர், திட்டக்குடி (Tk) | **04.08.94**<br>180 cm | B.E (E&I) | R&D Engineer<br>Siemens<br>Bangalure | திரு. R. ஞானப்பிரகாசம்,<br>கூடலூர் & Post,<br>திட்டக்குடி (Tk),<br>கடலூர் (Dt)<br>Cell : **94886 56043** |
| **G 4/6** செல்வன் **மு. ஜீவானந்தன்**<br>அஸ்வினி<br>கொத்தனுட<br>பூர்வீகம் : கொத்தட்டை | **23.12.93**<br>5' - 5" | B.E.,<br>Mech., | Barga India Pvt. Ltd.<br>Rs. 30,000/PM | திருமதி. M. கோமதி,<br>1/52, நடுத் தெரு, கொத்தட்டை,<br>கொத்தட்டை அஞ்சல்,<br>திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **87603 28544, 96889 51044** |
| **G 5/6** செல்வன் **V. அஜித்குமரன்**<br>அசுவிணி<br>பருவுட<br>பூர்வீகம் : அருகேரி (பெண்ணாடம்)<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | **21.11.99**<br>174 cm | B.E. (MCT) | State Bank of India<br>Salem<br>Rs. 8 Lakhs/PA | திரு. R. வரதராஜன்,<br>2/632, ஆரமரத்துகாடு By Pass<br>காமராஜர் சிலை அருகில்,<br>எருமாபாளையம் PO.,<br>சேலம் **– 636 015.**<br>Cell: **9443134352** (W), **9442213435** |
| **G 6/6** செல்வன் **இரா. விவேக்**<br>ஆயில்யம் 3ம் பாதம்<br>இடைய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : படித்த வேலைக்குச் செல்லும் பெண் | **31.05.98**<br>5' - 6" | B.E.<br>(Mech.) | Senior Testing<br>Engineer<br>HCL, Chennai<br>Rs. 9.5 Lakhs/PA | திருமதி. இரா. லதா,<br>356-1, மேல தெரு, அம்பாபூர்,<br>நாகமங்கலம்,<br>அரியலூர் Dt. **621 701.**<br>Cell : **98849 38924, 80126 82125** |
| **G 7/6** செல்வன் **த. ஸ்ரீசபரிராஜன்**<br>பூரம்<br>எரவுட<br>பூர்வீகம் : எறையூர், பெண்ணாடம்<br>விருப்பம் : குடும்பத்திற்கு ஏற்ற வரன் | **22.05.91**<br>170 cm | B.E. (EEE) | Rotary P. Ltd<br>Singapore<br>Rs. 13 Lakhs/PA | திரு. ஆ. தட்சிணாமூர்த்தி,<br>180/A, கொத்தட்டை ரோடு,<br>இறையூர் PO, திட்டக்குடி Tk.,<br>கடலூர் Dt. **– 606 111.**<br>Cell : **99433 03570, 97879 74287** |
| **G 8/6** செல்வன் **E. ராஜேஷ்**<br>உத்திராடம்<br>பங்களதரிய<br>பூர்வீகம் : இளநாங்கூர் (சிதம்பரம்)<br>விருப்பம் : படித்த, குணமுள்ள வரன் | **28.08.93**<br>**5' – 5"** | B.Com. | கோட்டக்<br>மகேந்திரா பேங்க்<br>Rs. 3,00,000/PA | திரு. S. இளங்கோவன்,<br>1/21, ஔவையார் தெரு,<br>அம்பாள் நகர், ராமாபுரம்,<br>சென்னை **– 600 089.**<br>Cell : **99620 19924** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/6** செல்வன் **பாலாஜி S.R.**<br>ரோகிணி<br>முதனுட<br>கோட்டவம் – காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : சமபடிப்பு. | **30.01.96**<br>180 cm | B.Tech<br>MBA | Accenture<br>Chennai<br>Analyst<br>Rs. 9 Lakhs.PA | திரு. S. ராம்தாஸ்,<br>17, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், லாஸ்பேட்,<br>புதுச்சேரி – **605 008.**<br>Cell : **94425 80571, 86108 73478** |
| **G 10/6** செல்வன் **கு. ஸ்ரீ அஸ்வத்**<br>உத்திரட்டாதி<br>முதனுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : தகுதியான வரன் | **11.11.87**<br>178 cm | B.E. (EEE) | System Engineer<br>Chennai | திரு. கோ. குஞ்சிதபாதம்,<br>20/2, மேற்கு ரத வீதி,<br>பெண்ணாடம் – **606 105.**<br>Cell : **88705 55569, 98423 57920** |
| **G 11/6** செல்வன்<br>**M. வெங்கட்குமார்**<br>மாயலுடையான்<br>பூர்வீகம் : கோடாலிகருப்பூர்<br>விருப்பம் : படித்த வரன் | **1.02.90**<br>180 cm | B.E.<br>(CSE) | ஸ்ரீ நவசக்தி<br>விநாயகர்<br>டிரான்ஸ்போர்ட்<br>Rs. 65,000/PM | திரு. R. மகாலிங்கம்<br>66, G2, சிவாலயா காம்ப்ளக்ஸ்,<br>முத்தமிழ் நகர், உசுப்பூர்,<br>சிதம்பரம்<br>Cell : **7708 658280, 95978 00801** |
| **G 12/6** செல்வன் **M. கோகுல்**<br>பூசம்<br>சாத்துக்குட<br>பூர்வீகம் : வரவுகுடி / கன்னியாகுடி | **29.03.96**<br>170 cm | | Software Engineer<br>Rs. 15,00,000/PA | திரு. V. முருகுபாண்டியன்<br>28, மேட்லி 2வது தெரு,<br>தி. நகர், சென்னை – **600 017.**<br>Cell : **94445 09619, 90803 91652** |
| **G 13/6** செல்வன் **K. பாலாஜி**<br>உத்திரம்<br>சாத்துகுடையான்<br>பூர்வீகம் : மணல்மேடு (பட்டவர்த்தி)<br>விருப்பம் : எதிர்பார்ப்பு இல்லை | **13.10.85**<br>188 cm | Xth Std. | Ideal Mebs Company<br>Chennai<br>Rs. 20,000/PM | திருமதி. கலைச்செல்வி,<br>Plot No. 77, Door No. 20,<br>12th Cross Street,<br>Padmavathi Nagar Extension,<br>Madambakkam, Chennai - 600 126.<br>Cell : **91762 80383** |
| **G 14/6** செல்வ **நவின் G.**<br>பூரட்டாதி<br>குவாவுட<br>பூர்வீகம் : திருநரையூர் – சிதம்பரம்<br>விருப்பம் : பணியில் உள்ள / செல்ல விருப்பம் உள்ள வரன் | **19.06.95**<br>173 cm | B.E. (EEE)<br>MBA | Senior Consultant<br>IBM, Chennai<br>Premium Salary | திரு. G. குணசேகரன்<br>மெய்க் காவல் தெரு,<br>சிதம்பரம்,<br>Cell : **90439 48259** |
| **G 15/6** செல்வன் **M. சரவணன்**<br>திருவாதிரை<br>வங்காரமுட<br>பூர்வீகம் : வானமாதேவி–காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : படித்த குடும்ப பாங்கான பெண். | **08.07.94**<br>170 cm | B.E. (ECE) | Cognizant Technologies<br>Solutions, Senior<br>Process Executive<br>Rs. 5 Lakhs / PA | திரு. B. முத்துக்குமரன்,<br>வெள்ளாழத் தெரு,<br>வானமாதேவி & PO,<br>காட்டுமன்னார்கோவில் Tk.–**608 701.**<br>Cell : **91768 40787, 91764 65658** |
| **G 16/6** செல்வன் **S.A. பிரபாகரன்**<br>கேட்டை – 2ம் பாதம்<br>பங்களதரிய<br>பூர்வீகம் : பின்னலூர் (சிதம்பரம் வட்டம்) | **23.08.96**<br>170 cm | M.Tech<br>(Mechanical<br>CAD - CAM)<br>VIT-Chennai | L & T Technology<br>Services Ltd.,<br>Bangalore | திரு. மு. செந்திலதிபன்,<br>103, வாகீசன் நகர்,<br>பார்வதிபுரம்,<br>வடலூர் – **607 303.**<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **94449 03240, 94432 89639** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 17/6** செல்வன் **P. வெங்கட்குமார்**<br>சுவாதி<br>உலகுட<br>வீரசிகாமணி | **03.05.96**<br>173 cm | B.E<br>(Comp.) | Software<br>Developer<br>HTC Holding P. Ltd.<br>Rs. 10 Lakhs.PA | திரு. P. Paramasivam<br>Plot No. 33, Kalai Nagar Extn.,<br>Sriram Nagar (Near CEOA School)<br>Madurai - 625 017.<br>Cell : **94434 75302, 94879 49800** |
| **G 18/6** செல்வன் **S. சரத்சந்திரன்**<br>ரேவதி<br>சேஷதரிய<br>பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் | **23.02.96**<br>5' - 11" | B.E.<br>MBA., | Asst. Manager<br>BA Continum Pvt. Ltd.<br>(Bank of America),<br>Mumbai<br>Rs. 17 Lakhs/PA | திரு. G. Senthilnathan,<br>68, Annai Therasa Nagar 6th Street,<br>Puzhuthivakkam,<br>Chennai - 600 091.<br>Cell : **99529 88551, 94454 14181**<br>E-mail : veni_senthil@yahoo.com |
| **G 19/6** செல்வன் **S. பாலமுருகன்**<br>உத்திரட்டாதி<br>சேஷதரிய<br>பூர்வீகம் : நட்டார்மங்கலம், காட்டுமன்னார்கோவில் | **27.03.90**<br>180 cm | M.Com.,<br>M.Phil., | Accounts Executive<br>CREW Pvt. Ltd., &<br>Freelance Tax<br>Consultant<br>Rs. 6 Lakhs/PA | திருமதி. S. சிவகலை<br>8/166, F1, திருவீதி அம்மன் கோவில் தெரு,<br>விஜய நகரம், மேடவாக்கம்,<br>சென்னை – **600 100.**<br>Cell : **99529 88551, 97907 01320**<br>E-mail : bala.gstp@gmail.com |
| **G 20/6** செல்வன் **R. சந்தோஷ்**<br>உத்திரட்டாதி<br>வெண்சாலுட<br>பூர்வீகம் : மணக்குடி (மயிலாடுதுறை) | **06.08.93**<br>170 cm | M.A., M.Phil.,<br>Ph.D. Music | Music Teacher<br>Varna Music Institute<br>Thiruvarur<br>Stage Performer<br>Rs. 7 Lakhs/PA | திரு. B. Rajalingam,<br>4/221, Main Road, Mannambanthal,<br>Mayiladuthurai - 609 305.<br>Cell : **94433 89398 / 89035 83224** |
| **G 21/6** செல்வ **S. ரவீன்குமார்**<br>சதயம் 1ம் பாதம்<br>கனகராய<br>பூர்வீகம் : திருநெல்வேலி<br>விருப்பம் : பணிபுரியும், பணிபுரிய விருப்பமுள்ள வரன். | **21.11.93**<br>175 cm | M.Tech.. | Senior Engineer, VLSI<br>Multicoreware Inc.<br>Uhnder inc<br>Rs. 22 Lakhs/PA | திரு. A. சங்கர்<br>28 & 29, VGN Highness,<br>Vikramaditya Street,<br>Iyyappanthangal, Chennai - 600 056.<br>Cell : **78459 14635, 86670 33721, 94447 48490**<br>E-mail : spvrk1956@gmail.com |
| **G 22/6** செல்வன் **P. ராகுல்**<br>சுவாதி<br>கூடலுட<br>விருப்பம் : படித்து பணியில் உள்ள வரன் | **25.12.97**<br>179 cm | B.E.,<br>Mechitronics | Kone Elevator<br>India Pvt. Ltd.<br>Ambattur, Chennai<br>Rs. 7 Lakhs/PA | திரு. M. பாண்டியன்,<br>15/12, நரசிம்மன் தெரு,<br>மேற்கு மாம்பலம்,<br>சென்னை – **600 033.**<br>Cell : **89460 74541, 98418 31008** |
| **G 23/6** செல்வன் **R. சரவணன்**<br>அவிட்டம்<br>விளந்துட<br>இருக்கை | **24.4.95**<br>173 cm | M.Com.,<br>M.Phil., | Income Tax and<br>GST Practitioner | திரு. R. காவேரி,<br>1/90, தெற்கு தெரு,<br>இருக்கை, வடுகசேரி அஞ்சல்,<br>கீழ்வேளூர் தாலுக்கா<br>நாகப்பட்டிணம் – **609 109.**<br>Cell : **82204 56545** |

## ஸ்ரீ பக்த புண்டரீகர்

''ஜய ஜய விட்டல! ஹர ஹர விட்டல! பண்டரி நாதா! பாண்டுரங்கா! எனும் கானாமிருத கோஷம் உலகமெங்கும் ஒலிக்க காரணகர்த்தாவாக அவதரித்த மகாபுண்ணியபுருஷர்தான்ஸ்ரீபுண்டரீகர்!ஹரிநாமமும், ஹர நாமமும் எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கும் தபோவனம் ''லோகதண்டம்'' எனும் திருத்தலம். இத்திருத்தலத்தில் ஸ்ரீமன் நாராயணன், திண்டீரன் எனும் அசுரனை வெற்றி கொண்டதாக புராணம் கூறுகிறது. இத்தலத்தில் ஜத்வா என்ற முனிவருக்கும், அவரது பத்தினி ஸாத்யகி (ஜானுதேவர் – சத்யவதி) க்கும் மகனாக ஸ்ரீ புண்டரீகன் பிறந்தார். பால்ய வயதில் அதர்மத்தின் வழியில் சென்றான். தக்க வயதில் உபநயனமும், 16 வயதில் திருமணமும் செய்வித்தனர். இருந்தும் புண்டரீசன் நல்வழியில் நாட்டம் கொள்ளவில்லை.

பெற்றோர் கிருஷ்ணபரமாத்மாவிடம் மனம் உருக, மகன் திருந்த வேண்டும் என்ற வேண்டுதலைச் சமர்ப்பித்தனர். ஒரு நாள் தெருவில் கோவிந்த நாம சங்கீர்த்தனம் கேட்க, முனிவர் வெளியே ஓடி வர, சில பக்த கோடிகள் காசி செல்வதைக் கேட்டு, கணவனும் மனைவியும் மருமகளிடம் கூறி விட்டு காசிக்கு பக்தர்களுடன் புறப்பட்டுச் சென்றனர். புண்டரீகன் வீடு வந்ததும், பெற்றோர்கள் காசிக்குச் சென்றதைக் கேள்வியுற்று மிக்க மகிழ்ச்சி அடைந்தான். 'நம்மைப் பிடித்த கஷ்டம் தொலைந்தது; இனி நிம்மதியாக வாழலாம்'' என்றான். ஆனால் காசி என்னும் மந்திரச் சொல் அவனைத் தூங்கவிடவில்லை. அடுத்த நாள் நாமும் காசி செல்லலாம் எனக் கூறி, இரண்டு குதிரைகளை வாங்கி வந்தபின் காசிக்குப் புறப்பட்டனர்.

ஜத்வா முனிவரும் அவரது பத்தினியும் உணவை மறந்தனர்; உறக்கம் துறந்தனர். பகவத் நாமத்தையே பேச்சாகவும், மூச்சாகவும் கொண்டனர். குதிரையில் சென்று கொண்டிருந்த மருமகள், கணவனிடம் அவர்களைக் காண்பிக்க, அவனோ, ''நாம் வேறு வழியில் காசிக்குச் செல்வோம்'' எனக்கூறி வேறு பாதையில் சென்றான். இரவு நேரம் நெருங்கி விடஒரு தர்மசாலையில் தங்கினர். சிறிது தொலைவில் ஒரு ஆசிரமத்தைக் கண்ட புண்டரீன் காசிக்கு இன்னும் எவ்வளவு தொலைவு என அறிய அங்கு சென்றான். அது குக்குட முனிவரின் ஆசிரமம். அவர் மகா தபஸ்வி. தாய், தந்தையர்களை தெய்வமாக மதிப்பவர். ஒப்பற்ற மாதா பிதா சேவையால் பரமனையே தரிசிக்கும் பேராற்றல் பெற்ற பரமஞானி. புண்டரீகன் அவரிடம் சென்று, ''சுவாமி! காசி இன்னும் எத்தனை காத தூரம் உள்ளது''? என வினவ, அவரோ ''நான் காசியையும் கண்டதில்லை; கங்கையையும் கண்டதில்லை'' என்கிறார். அதற்கு மேல் முனிவர் அவன் எதிரில் நிற்கவும் ,இல்லை. இப்புண்ணிய புருஷரைத் தரிசித்து தர்மசாலைக்குத் திரும்பிய அவன் உள்ளத்தில் இனம் தெரியாத ஒரு கலக்கம்! ஏக்கம்!

அதிகாலை நேரத்தில் அவன் வெளியில் வர, மூன்று அரூபியான, அழுக்கடைந்த ஆடைகள் அணிந்த பெண்கள் இடுப்பில் குடத்துடன் முனிவரின் ஆசிரமத்திற்கு செல்வதைக் கண்ணுற்றான். அவர்கள் ஆசிரம வாசலையும், திண்ணையையும் நன்றாக சுத்தம் செய்து, மெழுகி விதவிதமாக கோலமிட்டனர். அவர்கள் அங்கிருந்து திரும்பும் போது அதிரூப சுந்தரிகளாக திரும்பினர். ஏதோ ஒரு காந்தசக்தி புண்டரீகனை அவர்கள் பால் ஈர்க்க, அவர்களிடம் ''நீங்கள் யார் ? எதற்காக உஷத்கால வேளையில் இங்கு வந்து பணிபுரிகிறீர்கள்''? என்று கேட்க, ''மூர்க்கனே! அதர்மத்தைக் கடைப்பிடித்து வாழ்பவனே! எட்டி நில்'' என கோபமாக கூறியதும், ''என்னை ரட்சியுங்கள்'' என்று அவர்கள் பாதங்களைப் பற்றவும், அவனது பாவங்கள் யாவையும் விலகின. நாங்கள் மூவரும் கங்கை, யமுனை, சரஸ்வதி எனும் புண்ணிய நதிகளாவோம். மக்கள் எங்களில் நீராடி தங்கள் பாவத்தைத் தொலைக்கின்றனர். அப்பாவங்களைக் களைய நாங்கள் தினமும் ஆசிரமத்துக்கு வந்து தூய்மை அடைந்து திரும்புகிறோம். தன் பெற்றோரை தெய்வங்களாகப் பாவித்து பணிவிடை செய்யும் குக்குட முனிவருக்கு சேவை செய்வதால் எங்கள் பாவங்கள் மறைகின்றன எனக் கூறி மூன்று பேரும் மாயமானார்கள். இதைக் கேட்ட அக்கணமே மனம் மாறிய புண்டரீகன், பெற்றோருக்கு சேவை புரிவதையே தலையாய கடமையாகக் கொண்டான்.

புண்டரீகனின் பெருமையை உலகிற்கு வெளிப்படுத்த எண்ணிய கிருஷ்ணபகவான், ருக்மணி தேவியை துவாரகைக்கு அழைத்துச் செல்லும் வழியில், பெற்றோருக்கு சேவை செய்யும் புண்டரீகனின் குடிலின் முன் நின்று குடிப்பதற்கு தண்ணீர் கேட்டார். அவ்விடம் சேறும் சகதியுமாக இருந்ததால் ஒரு செங்கல்லை வெளியே வீசி, ''அதன் மேல் நில்லுங்கள்! பெற்றோரை கவனித்து விட்டு வருகிறேன்'' என புண்டரீகன் கூறினார். சேவை முடிந்து வெளியே வந்து கிருஷ்ணபகவானை காலில் விழுந்து வணங்கினார். ''உன் பெற்றோர் சேவையில் மகிழ்ந்தேன்; என்ன வரம் வேண்டும்'' என கிருஷ்ணன் கேட்க, ''நீங்கள் எழுந்தருளிய இத்தலம் புண்ணியத் தலமாக திகழ வேண்டும்; பக்தர்களுக்கு விட்டலனாக அருள் புரிய வேண்டும்'' என வேண்டினார். பீமா நதியின் கிளை நதியான சந்திரபாகர நதியில் நீராடி என்னை வழிபடும் பக்தர்களின் பாவங்கள் மறையும் என்றருளி மறைந்தார். 'புண்டரீகபுரம்' என அழைக்கப்பட்ட இத்தலம் பின்னாளில் மருவி பண்டரிபுரம் ஆனது. ஸ்ரீ புண்டரீகர் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்ததோடு, ஹரி நாம பஜனையும் செய்து வந்தார்.

ஸ்ரீ பக்த புண்டரீகர் திருவடியே சரணம்!

– திருமதி. லலிதா வேலாயுதம்.

# நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
01.02.1938

மறைவு
14.06.2021

பின்னலூர், **S. சிவசுப்பிரமணியன்**

கூட்டுறவு சார்பதிவாளர் (CSR ஓய்வு)

சிதம்பரம்

*கண்ணுக்கு ஒளியாய், நெஞ்சத்தில் நினைவாய்*
*நிலையாய் என்றும் எங்களோடு*
*எங்களின் இறைவனாய் – என்றும்*
*எங்களை வழிநடத்த வணங்குகிறோம்.*

மகன்
**S. கணேசன்**

மருமகள்
**G. ஜோதிலட்சுமி**

பேரன்கள்

**G. விஜய்,** BE

**G. கிஷோர்,** BE

Cell No: 89402 60114

# நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி




**திருவாரூர் மாவட்டம் குடவாசல் தாலுக்கா, இலையூர், விளந்துட கோத்திரம்**
**தெய்வத்திரு, வெங்கடாசலம் பிள்ளை - சரோஜா அம்மாள் இவர்களின் மருமகளும்**
**எங்களின் உயிரினும் மேலான குடும்ப குல விளக்கு**

**திருமதி. ப. பிரேமா** M.A.,B.Ed., உதவி தலைமை ஆசிரியர்

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

என்றும் நினைவில் வாழும்...

கணவர் : **வெ.வரது ( எ ) வரதராஜன்**
நெல்லுக்கடைத்தெரு, கும்பகோணம்.

மகன் : **வ.உப்பிலி ( எ ) ஸ்ரீகாந்த்**
லண்டன்.

மற்றும் : **உறவினர்கள்**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
05–05–1937

மறைவு:
07–05–2025

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா,

மேனாங்குடி திரு. **G. வாகீசன் பிள்ளை**

(Rtd. Executive Director - Hutti Gold Mines, Former Consultant - TAMIN
Visiting Professor - CEG, Anna University)

அவர்கள் 07–05–2025 புதன்கிழமை காலை 5.25 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி : **V. வேதாம்பிகை**

மகன் – மருமகள் :

**V. முருகன் - M. சித்ரா**

**V. சதீஷ் - S. வேதா (கீதா)**

மகள் – மருமகன்

**C. மீனா - Dr. C. சந்திரசேகர்**

**பேரன் பேத்திகள்** மற்றும் **உறவினர்கள்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
11–10–1950

மறைவு:
27–06–2024

தேசிய நல்லாசிரியர் **சு. சண்முகம் பிள்ளை,** M.A., B.Ed.,

தலைமை ஆசிரியர் (ஓய்வு)
முன்னாள் ஒன்றிய செயலாளர் (புவனகிரி கார்காத்தார் சங்கம்)
மேல் வளையமாதேவி

**அன்பின் திருவுருவாய், ஆசையின் மறுபெயராய்,**
**பண்பின் பூர்வீகமாய், அறிவின் சிகரமாய்,**
**உதவி என்றவுடன் வாரி வழங்கும் வள்ளலாய்,**
**உழவே தலை உழுவாரே தலைவர்**
**என்ற நியதிக்கு இலக்கணமாய் விளங்கி**
**தன் ஈடில்லா உதவிகளால் சமுதாயத்தில் என்றும்**
**நிலைத்து நின்று இறைவனடி சேர்ந்தாலும் எங்கள்**
**மனங்களின் இறைவனாய் மலர்கிறாய்!**

என்றும் நினைவுடன்
மனைவி : **தி. சுசிலா சண்முகம்**, த.ஆ (ஓய்வு)
மகன் : **ச. கார்த்திகேயன்**, M.Sc., M.A.., B.Ed, தலைமை ஆசிரியர்
மருமகள் : **கா. அபிநயா**, B.Sc., M.A., B.Ed, ஆசிரியை
பேரப்பிள்ளைகள் : **கா. கவின், கா. ஹன்சிகா**
மற்றும்
தம்பி **சு. கல்யாணசுந்தரம்** மற்றும் **குடும்பத்தினர்**
வளையமாதேவி.

# 10–ஆம்
# ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04.05.1942

மறைவு
08.06.2015

பெருந்தோட்டம்

## ஐ. சொக்கலிங்கம் பிள்ளை

என்றும் அவர்களின் நல்லாசியுடன்


SHRUTHI SHELTERS
BUILDERS & PROMOTERS
Project Management | Constructions | Property Management
Call +91 9940104885
112 A, Nehru Street, Alwarthirunagar, Chennai - 600087. Ph : 044 2486 2527 email : shruthishelters@gmail.com

9994456721
NANDHI CREATIONS
Digital Marketing
Logo design | Insta & Fb Ads | Google Ads
No.112A, Nehru Street, Alwarthirunagar, Chennai- 600087.

ايندرامس سنديرين برحد
INDRAMAS
SDN BHD
BUILDING & INFRASTRUCTURE CONTRACTOR
ISO 9001:2015 & ISO 14001:2015 CERTIFIED

நான்காம் ஆண்டு
நினைவு அஞ்சலி

# வையூர் ஆ.சண்முகம் M.A.,M.Ed.,

மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணி ஓய்வு
நடராஜா நகர், சிதம்பரம்



10.08.1943 - 05.06.2021

கொழுமுட கோத்திரத்தின் சொத்தே
எங்கள் குலதெய்வமே
ஆங்கில மொழியின் பீஷ்மராய்
அரசு பள்ளிகளில்
வலம் வந்த நாயகரே.
நீங்கள் காட்டிய பாதையில்
இனிதாய் பயணிக்கிறோம் நாங்கள்...
என்றும் தங்கள் ஆசிகளில்...

**ச. தனலட்சுமி**
துணைவியார்

| | |
|---|---|
| **எஸ். ஹேமலதா** | **ச. சுமித்ரா** |
| **ஆர். ராஜா** | **ஜெ. பார்த்தசாரதி** |
| மயிலாடுதுறை | சிதம்பரம் |

பேரன் / பேத்தி

- **R.H. ராஜ்குமார்** • **P. விக்னேஷ்** • **N. கணேஷ்**
- **R.H. ராஜலக்ஷ்மி** • **செல்வி P. லட்சுமி பிரியா**
- **M. அலமேலு மங்கை** • **S. விமலா**

கொள்ளு பெயரன்

- **ஆதிரன்** • **மகத்** • **விஷ்வ வர்மன்**

# வாழ்த்துகிறோம்



அகவை 80 காணும் கார்குல வள்ளல்

## திரு. ச. வெங்கடேசன் பிள்ளை

## திருமதி ஞானாம்பிகை

தம்பதியினரை வாழ்த்தி வணங்குகிறோம்.





**ஷங்கர் .K.S**
(CREW Rly. Oragadam, Chennai)
மாடம்பாக்கம், சென்னை - 603 202.

**மணிகண்டன் .K.S**
(CB.I SITE, Chennai - 120.)
தில்லை நகர், விருத்தாசலம்

**T. சிவக்குமார்**
(NLC TPS Expansion)
V. குமாரங்கலம், விருத்தாசலம்

**T. வேல்முருகன்**
(TNSTC)
V. குமாரங்கலம், விருத்தாசலம்




**SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM**
**SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION**

# WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

## CUT DOWN YOUR ELECTRICITY COST

**MARUTHI POWER CONTROL SYSTEM**

**CALL US @ 9841828077**

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

**Posted at Pathrikachanel, Egmore**
**RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027**
**Date of Publication : 15th of Every Month** **15th / 16th June 2025**

CHOZHA
HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

**We Thanks Honorable Justice Dr.Jothimani, Former Judge, Madras High Court, for staying at our hotel with his family to celebrate their Bhima Ratha Shanti and blessing us with their presence...**



Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**